24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 130 | பங்குனி 23ஆம் நாள் | சனிக்கிழமை | 06 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

# கூட்டமைப்பின் ஆதரவுடன் நிறைவேறியது பாதீடு

## சு.க. நடுநிலமை, மகிந்த அணி மற்றும் ஜே.வி.பி. எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

நடப்பு ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் 45 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது. வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 119 வாக்குகளும், எதிராக 74 வாக்குகளும் பதிவாகின. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்று » 21

## வாக்கெடுப்பில் நடுநிலமை வகித்தார் செல்வம் எம்.பி.

கொழும்பு, ஏப். 6

வரவு - செலவுத் திட்டத்துக்கான இறுதி வாக்கெடுப்பு நேற்று இடம்பெற்றபோது, தமிழ்த் » 21

## வறட்சிப் பாதிப்பு: யாழ்ப்பாணத்துக்கு 5 கோடி ரூபா

கொழும்பு, ஏப். 6

வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாதிப்புக்குள்ளான ஏனைய மாவட்டங்களுக்கு தலா பத்து இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட » 21

## முத்தம் கொடுத்தவரே தற்போது விமர்சிக்கிறார்

### ரவி, மங்கள மீது மகிந்த தாக்கு

கொழும்பு, ஏப். 6

அரசின் இறுதி வரவு - செலவுத் திட்டத்தையே, பழைய நிதியமைச்சர் (ரவி கருணாநாயக்க) விமர்சிக் » 03

## கட்சிக் கூட்டத்தில் கத்திவிட்டு கப்சிப்பாக ஆதரவளித்த எம்.பிக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுக் காலையில் இடம்பெற்றது. அரசுக்கு எதிராக பல்வேறு விமர்சனங்களைநாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்தனர். கூட்டமைப்பின் ஆதரவைப்பெற்றபின் » 21

## மைத்திரி யாழ். வருகை

### காணிகளும் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வ » 21

## கொலைக் குற்றச்சாட்டு: 10 ஆண்டுகள் சிறை ரூ. 8 லட்சம் இழப்பீடு வழங்கவும் பணிப்பு

மன்னார், ஏப். 6

மன்னாரில் 2014ஆம் ஆண்டு குடும்பத் தலைவர் ஒருவரைக் » 21

### நொதேன் பவரைக் காப்பாற்றிய விக்னேஸ்வரனும், ஐங்கரநேசனும்

## எந்த முகத்துடன் மக்களை சந்திக்கப் போகின்றார்கள்?

### கேள்வி எழுப்புகிறார் தவராசா

» 21

## புத்தாண்டை முன்னிட்டு விலை குறைப்பு

கொழும்பு, ஏப். 6

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு » 21




உதயன் ஊடக அனுசரணையுடன்

## பன்னாட்டு தமிழ் இதழியல் மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

(விரிவு- பக்.17)

விபத்தில்

## முறிந்த மின்கம்பத்தை சீரமைக்கச் சென்றவர் சாவு

### வடமராட்சியில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஏப். 6

விபத்தில் முறிந்த மின் கம்பத்தை சீரமைக்கச் சென்ற மின்சாரசபை ஊழியர், மின் கம்பம் முறிந்து வீழ்ந்ததில் உயிரிழந்த பரிதாப சம்பவம் வடமராட்சியில் இடம் பெற்றுள்ளது.

கரணவாய் தெற்கு வீரப்பிராய் பகுதியில் நேற்று » 03

## லண்டன் விபத்தில் யாழ். வாசி சாவு

லண்டன், ஏப். 6

லண்டனில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பா » 21

## அரசமைப்பு முயற்சி ஏன் கைவிடப்பட்டது?

### சபையில் கேட்டார் சம்பந்தன்

கொழும்பு, ஏப். 6

தற்போதைய அரசின் ஆட்சிக்காலத்தில், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும், தற்போது அந்தப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. எதற்காக அந்தப் பணிகள் » 21

## மின்வெட்டு 10 இல் முடிவுக்கு வரும்

### அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

நாட்டில் முழுமையான மின் தேவையை நிறைவு செய்ய 300 மெகா வாட்ஸ் மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வளம் கண்டறியப்பட்டுள்ளதால் எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் மின்வெட்டு நடை » 21

## இருதய சத்திரசிகிச்சை விடுதியை உடனடியாக இயக்குமாறு பணிப்பு

### நோயாளரை நிபுணர்கள் பணத்துக்காக ஏய்த்த அவலமும் போட்டுடைப்பு

» 21

## களவாக வெளிநாடு செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் கிளி.யில் 26பேர் கைது

கிளிநொச்சி, ஏப். 6

கிளிநொச்சியிலிருந்து கடல் வழியாக களவாக வெளிநாட்டுக்குச் செல்ல முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் 26பேரை சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர். அவர்களைக் கிளி » 21

## 18 இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் கைது

யாழ்ப்பாணம், ஏப். 6

இலங்கை கடற்பரப்புக்குள் சட்ட விரோதமாக நுழைந்து » 21

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஈழத் தமிழர் நலன் சார்ந்து இந்தியா சிந்திக்குமா?

ஈழத் தமிழரின் அரசியலில் அன்று தொடக்கம் இன்று வரையில் பிராந்திய அரசியல் சக்தியாக இருந்து இந்தியா செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவின் ஆதிக்கம் ஈழத் தமிழர் அரசியலில் இன்றும் இருந்து கொண்டிருக்கின்றது. ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் இந்தியாவின் அணுகுமுறை என்பது எப்போதும் தனது அரசியல் நலன் சார்ந்ததாகவே இருந்திருக்கின்றது. இருந்து கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் அயலுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் எப்போதுமே, ஈழத்தமிழர்களைகறிவேப்பிலையாகவேபயன்படுத்தி இருக்கின்றார்கள். இப்படியானதொரு சூழலில், ஈழத் தமிழர்கள் மீண்டும் இந்தியாவை நம்பிக் களமிறங்குவதானது, பொருத்தப்பாடானதாக அமையாது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல், ஈழத் தமிழர் அரசியலை மீண்டும் இந்தியாவிடம் அடகுவைப்பதற்கானமுன்நகர்கவுகளுக்குதூபம்இடப்படுகின்றதோ என்ற சந்தேகத்தை வலுவாக எழுப்பி விட்டிருக்கின்றது.

அரச தலைவர் தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் இடம்பெறவிருக்கின்றது. அந்தத் தேர்தலில் தெற்கு மூன்றாகவோ அல்லது இரண்டாகவோபிரிந்து களமிறங்கத்தான் போகின்றது. அரச தலைவர் வேட்பாளரில் தமிழ் மக்கள் எவரை ஆதரிக்கப்போகின்றார்கள் என்பது முக்கியமானது. சிங்கள வாக்குகள் இரண்டாகவோ அல்லது மூன்றாகவோ பிளவடையும் சூழலில் தமிழ் மக்கள் தீர்மானமிக்க சக்தியாக மாறுவார்கள். கடந்த அரசதலைவர் தேர்தலிலும் இதுவே நடந்திருந்தது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழர்கள் எந்தத்தரப்பு வேட்பாளரை ஆதரிக்கவேண்டும் என்பது தொடர்பில் இரண்டு வேட்பாளர்களுடனும் பேச்சு நடத்துவதற்கு மூன்றாம் தரப்பு நடுநிலையாளராக இந்தியா செயற்படவேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்துள்ளார். இந்திய இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்டபோது, ஈழத் தமிழர்கள் சார்பாகக் கையெழுத்திட்டது இந்தியா என்ற அடிப்படையில், இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் கூறியிருந்தார்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் ஈழத் தமிழர்கள் சார்பாக இந்தியா கையெழுத்திட்டிருந்தாலும், இரண்டு நாடுகளுக்கும் இடையிலானதாக அந்த ஒப்பந்தம் அமைந்திருந்தபோதிலும், இலங்கை அரசு தன்னிச்சையாக எதேச்சதிகாரமாக அந்த ஒப்பந்தத்தை மீறியபோது, அதனைத் தூக்கிக் கடாசியபோது இந்தியா மௌனமாகவே இருந்தது.

வடக்கு – கிழக்கு பிரிக்கப்பட்டபோதும் சரி, 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக மாகாணத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் களவாக கொழும்பு அரசுக்கு திருப்பி எடுக்கப்பட்டபோதும் சரி, இந்தியா ஒரு சாட்டுக்குத்தானும் இலங்கை அரசிடம் ஏன் என்று கேட்கவில்லை.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் ஈழத் தமிழர்கள் சார்பாக கையெழுத்திட்ட இந்தியா, ஈழத் தமிழர்களுக்கு அந்த ஒப்பந்தத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களை கொழும்பு பறிக்கும்போது மௌனியாக இருந்தது. அப்படிப்பட்ட இந்தியா, அரசதலைவர் வேட்பாளர்களில் எவரை ஆதரிப்பது என்பது தொடர்பில் இரண்டு தரப்புப் பேச்சுக்களிலும் மூன்றாம் தரப்பு நடுநிலையாளராகக் கலந்து கொண்டாலும், ஈழத்தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது, பேச்சு மீறப்படும்போது என்ன செய்யும்? மீண்டும் மௌனியாகவே இந்தியா இருக்கப் போகின்றது.

அப்படிப்பட்டதொரு நிலையில் மீண்டும் இந்தியாவிடம், ஈழத்தமிழர் அரசியல் அடகுவைக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

இந்தியாவை நம்பியிருந்ததால் ஈழத் தமிழர்கள் இழந்தவைகள்தான் ஏராளம். ஈழத்தமிழர்களின் அரசியல், வாழ்வு இந்த நிலமையில் வந்து, நாதியற்று நிற்பதற்கும் இந்தியாவே முக்கிய பங்காளி.

இந்தியா தொடர்பில் வரலாறு சொல்லித் தந்த பாடங்களின் **அடிப்படையில் இனி நடப்பதே சிறப்பு. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் இதனை விளங்கிக் கொள்ள**





# இந்தியா–இலங்கை நிலவழி சாத்தியமா?

இன்னும் 700-750 ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் செல்ல கப்பல் தேவைப்படாது. நில மார்க்கமாகவே சென்றுவிடலாம். ஆம். இரு நாடுகளும் இயற்கையான நிலப் பாலத்தால் இணைக்கப்படும் என்கின்றன உலகு சார் நடத்தப்பட்ட ஆய்வுகள். இன்றைய கடல் மட்டத்தோடு கடந்தகால கடல் மட்டத்தை ஒப்பிடும்போது கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் ஆய்வாளர்கள் இந்தக் கருத்தை முன்வைக்கிறார்கள்.

தெற்காசிய நாடுகளில். இந்தியாவும் இலங்கையும் மிக அருகில் உள்ள இரண்டு நிலப்பகுதிகள், நாடுகள். இந்த நிலப்பகுதிகள் இரண்டும் கடந்தகாலத்தில் ஒரே நிலப்பகுதியாக இருந்தன என்றும், பின்னர் கடல் கோளினால் பிரிக்கப்பட்டன என்றும் சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் விவரிக்கின்றன. இன்றைய கடல் மட்டத்தோடு கடந்தகாலக் கடல் மட்டத்தை ஒப்பிடும்போது, கடந்த 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடல் மட்டம் உயர்ந்தும் தாழ்ந்தும் வந்திருக்கிறது என்கின்றன உலகு சார் நடத்தப்பட்ட ஆய்வுகள்.

**இணைந்திருந்த இலங்கை**

கடந்த 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு கடல் மட்டம், இன்றைய கடல் மட்டத்தைவிட சுமார் 7 மீற்றர் ஆழத்தில் இருந்ததாகவும், 1.4 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தில் 130 மீற்றர் ஆழத்துக்குத் தாழ்ந்ததாகவும், 1.25 லட்சம் ஆண்டுகள் காலகட்டத்தில் கடல் மட்டம் உயர்ந்து தற்கால மட்டத்துக்கு 5 மீற்றர் கீழான உயரத்தை அடைந்தது என்றும் அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பின்னர், கடல் மட்டம் கொஞ்சம் கொஞ்சமாகத் தாழ்ந்து சுமார் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தில், இன்றைய கடல் மட்டத்தைவிட 130 மீற்றர் ஆழத்தில் இருந்ததாகவும், கடந்த 20 ஆயிரம் ஆண்டுகள் முதல் கொஞ்சம் கொஞ்சமாக கடல் மட்டம் உயர்ந்து தற்கால நிலையை அடைந்திருக்கிறது என்றும் இந்த ஆய்வுகள் கூறுகின்றன.

கடல் மட்டத்தில் நிகழ்ந்த இந்த மாறுதல்கள் **திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்** தொலை உணர்வுத் துறையில் கணினி மூலம் காட்சிப்படுத்திப் பார்க்கப்பட்டுள்ளது. கடந்த 2 லட்சம் ஆண்டுகள் முதல் தற்காலம் வரை, கடல் மட்டம் தாழ்ந்தபோது இந்தியாவும் இலங்கையும்

> தற்போது கோடியக்கரை யாழ்ப்பாணத்துக்கு நடுவே பாதி தூரம் (20 கி.மீ.) வரை கடலில் தென்படும் மணல் படுகைகள் இன்னும் 500 ஆண்டுகளில், மேலும் 10 கி.மீ. யாழ்ப்பாணத்தை நோக்கி வளைந்து நெளிந்த நிலப்பகுதியாக வளர்ந்திருக்கும். 2600ஆம் ஆண்டுவாக்கில் 40 கி.மீ. தொலைவுக்கும், 2750ஆம் ஆண்டுவாக்கில் 50 கி.மீ. தொலைவுக்கும் வளர்ந்திருக்கும். இதன் மூலம், வளைந்து நெளிந்த நிலப்பகுதியாக யாழ்ப்பாணத்தோடு இணையும். பட்டுக்கோட்டை மன்னார்குடி நிலப்பகுதியின் உயர்வு, கடல் நீரோட்டத்தின் வேகம் சுழற்சி ஆகியவை கடந்த 6 ஆயிரம் ஆண்டுகளில் இருந்துவரும் இதேநிலையில் தொடர்ந்தால், இந்திய இலங்கை நிலப்பகுதிகள் இணைவது சாத்தியம்தான்.

இணைந்திருந்ததையும், கடல் மட்டம் உயர்ந்த காலங்களில் பிரிந்து இரு நிலப்பகுதிகளாக இருந்ததையும் உணர முடிந்தது. சமீபத்தில், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆய்வில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே வடமேற்கே வேதாரண்யத்தில் இருந்து தென்கிழக்கே இலங்கை யாழ்ப்பாணத்தை நோக்கி நீளமான நிலப்பகுதி உருவாகிவருவது கண்டறியப்பட்டிருக்கிறது.

**பிறைவடிவ மணல்மேடுகள்**

செயற்கைக்கோள் படம் மற்றும் கணினி தகவலியல் **(ஜிஐஎஸ்) சார் ஆய்வுகள் மேலும் பல அரிய**


கடந்த 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு கடல் மட்டம், இன்றைய கடல் மட்டத்தைவிட சுமார் 7 மீற்றர் ஆழத்தில் இருந்ததாகவும், 1.4 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தில் 130 மீற்றர் ஆழத்துக்குத் தாழ்ந்ததாகவும், 1.25 லட்சம் ஆண்டுகள் காலகட்டத்தில் கடல் மட்டம் உயர்ந்து தற்கால மட்டத்துக்கு 5 மீற்றர் கீழான உயரத்தை அடைந்தது என்றும் அந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பின்னர், கடல் மட்டம் கொஞ்சம் கொஞ்சமாகத் தாழ்ந்து சுமார் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தில், இன்றைய கடல் மட்டத்தை விட 130 மீற்றர் ஆழத்தில் இருந்ததாகவும், கடந்த 20 ஆயிரம் ஆண்டுகள் முதல் கொஞ்சம் கொஞ்சமாக கடல் மட்டம் உயர்ந்து தற்கால நிலையை அடைந்திருக்கிறது என்றும் இந்த ஆய்வுகள் கூறுகின்றன.



தகவல்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றன. வேதாரண்யத்துக்கு மேற்கே உள்ள பட்டுக்கோட்டை மன்னார்குடி பகுதியில் இரண்டு பூமி வெடிப்புகள் உள்ளதாகவும். இதன் மூலம் பட்டுக்கோட்டை மன்னார்குடி பகுதி கொஞ்சம் கொஞ்சமாக மேலே எழும்பிக்கொண்டு இருப்பதாகவும் தெரிகிறது. இதனால் கிழக்கே உள்ள திருத்துறைப்பூண்டி வேதாரண்யம் கடலோரப்பகுதி கொஞ்சம் கொஞ்சமாக மேலே உயர்ந்தும் தென் கிழக்காக வளர்ந்தும்வருகிறது. இதன் காரணமாக, வடமேற்கே திருத்துறைப்பூண்டியில் இருந்து தென்கிழக்கே வேதாரண்யம் கோடியக்கரை வரை சுமார் கடந்த 6 ஆயிரம் ஆண்டுகளில் கடல் 60 கி.மீ. பின்வாங்குவதோடு, நிலப்பகுதி மண்மேடுகளாகப் பிறை வடிவில் உருவாகியிருக்கிறது.

பட்டுக்கோட்டை மன்னார்குடி நிலப்பகுதி உயரும்போது, அதைச் சுற்றிக்கொண்டு கடற்கரை ஓரமாக, மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை வடக்கு நோக்கி ஓடும் கடலோர நீரோட்டமும், நவம்பர் முதல் பெப்ரவரி வரை தெற்கு நோக்கி ஓடும் நீரோட்டமும் இதற்குக் காரணம் எனலாம். அதாவது, பட்டுக்கோட்டை மன்னார்குடி திருத்துறைப்பூண்டி பகுதியைக் கடக்கும்போது நீரோட்டம் தடுக்கப்படுவதால், அந்தப் பகுதியைச் சுற்றிப் பிறை வடிவில் மணலைக் கொட்டுகிறது நீரோட்டம். இந்த நிலப்பகுதி சுமார் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உயர, உயர, ஒன்றன்பின் ஒன்றாக முந்தைய பிறை வடிவ மண்மேடுகளை அடுத்தடுத்த மணல் மேடுகள் சுற்றிக்கொண்டு இப்படி வடிவம் பெற்றிருக்கின்றன.

இதேபோல், திருத்துறைப்பூண்டி முதல் கோடியக்கரை வரை காணப்படும் மணல் மேடுகளை கார்பன் வயது கணிப்புக்கு உட்படுத்தியபோது அவை கி.மு. 4 ஆயிரத்து 100 ஆண்டுகளில் கடற்கரை திருத்துறைப்பூண்டி அருகே இருந்ததாகவும், நிலம் உயரும்போது கடல் பின்வாங்கி கி.மு. 3 ஆயிரத்து 600 ஆண்டுகளில் மராங்காநல்லூரை அவை அடைந்ததாகவும் தெரியவருகிறது. கி.மு. 1600ஆம் ஆண்டுவாக்கில் கடல் மேலும் பின்வாங்கி திட்டக்குடியையும், கி.பி. 700ஆம் ஆண்டுவாக்கில் வேதாரண்யத்தையும், பின்னர் கி.பி. 1000ஆம் ஆண்டுகளில் கோடியக்கரையையும் அடைந்திருக்கிறது. கி.பி. 2000 ஆண்டுகளில் எடுத்த செயற்கைக்கோள் படங்கள் கடலில் கோடியக்கரையில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி 20 கி.மீ. வரை மண் குவியல்கள் இருப்பதைக் குறிப்பதால் ஆண்டுக்கு 20 மீட்டர் வீதம் நிலப்பகுதி கடலில் கோடியக்கரையிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி உருவாகி உள்ளது என்று கணிக்க முடிகிறது.



இதுபோன்று கடந்த 6 ஆயிரம் ஆண்டுகளில், இருந்து இன்றுவரை ஒவ்வொரு ஆண்டுக்கும் இடையே மாறுபட்ட அளவீடுகளில் திருத்துறைப்பூண்டியில் இருந்து கோடியக்கரை வரை உருவாகி உள்ள நிலப்பகுதிகள், பட்டுக்கோட்டை மன்னார்குடி திருத்துறைப்பூண்டி பகுதிகளில் பூமி மேல் எழும்புவதில் உள்ள மாறுபட்ட தன்மைகளையும், இக்காலங்களில் கடல் நீரோட்ட த்தின் மாறுபட்ட வேகத்தையும் காட்டுகின்றன.

**கோடியக்கரை யாழ்ப்பாணம்**

மேலும் கடந்த 6,000 ஆண்டுகளில் சுமார் 60 கி.மீ. தூரம் திருத்துறைப்பூண்டியில் இருந்து கோடியக்கரைக்கு அப்பால் கடலில் 20 கி.மீ. வரை யாழ்ப்பாணத்தை நோக்கி வளர்ந்துள்ள நிலப்பகுதி எதிர்காலத்தில் எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெறும் என்று கணினியில் காட்சிப்படுத்தியபோது மிக முக்கியமான விஷயங்களைக் கணிக்க முடிகிறது.

தற்போது கோடியக்கரை யாழ்ப்பாணத்துக்கு நடுவே பாதி தூரம் (20 கி.மீ.) வரை கடலில் தென்படும் மணல் படுகைகள் இன்னும் 500 ஆண்டுகளில், மேலும் 10 கி.மீ. யாழ்ப்பாணத்தை நோக்கி வளைந்து நெளிந்த நிலப்பகுதியாக வளர்ந்திருக்கும். 2600ஆம் ஆண்டுவாக்கில் 40 கி.மீ. தொலைவுக்கும், 2750ஆம் ஆண்டுவாக்கில் 50 கி.மீ. தொலைவுக்கும் வளர்ந்திருக்கும். இதன் மூலம், வளைந்து நெளிந்த நிலப்பகுதியாக யாழ்ப்பாணத்தோடு இணையும். பட்டுக்கோட்டை மன்னார்குடி நிலப்பகுதியின் உயர்வு, கடல் நீரோட்டத்தின் வேகம் சுழற்சி ஆகியவை கடந்த 6 ஆயிரம் ஆண்டுகளில் இருந்துவரும் இதே நிலையில் தொடர்ந்தால், இந்திய இலங்கை நிலப்பகுதிகள் இணைவது சாத்தியம்தான்.

அதாவது, இந்தியாவும் இலங்கையும் ஒரு இயற்கையான நிலப்பாலத்தால் இன்னும் 2 ஆயிரத்து 750ஆம் ஆண்டுவாக்கில் இணைந்திருக்கும். இந்தப் புதிய நிலப்பாலத்தின் மூலம் உருவாகும் நிலவியல் மாற்றங்கள், கடல் நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள், இவை வளைகுடாவில் ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவை விரிவாக ஆராயப்பட வேண்டும். அப்படி ஒரு நிலப்பகுதி உருவாகியிருந்தால், எதிர்காலத்தில் ஏற்படப்போகும் புவியியல் மாற்றம் புதிய திறப்புகளையும் ஏற்படுத்தலாம். இவ்வளவு ஏன் அதுவே தமிழர்களுக்குத் தீர்வுமாகலாம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# காலத்துக்கு ஏற்ப எம்மையும் மாற்றிக் கொள்வோம்

தற்போது கடும் வெப்பம் நிலவி வருகிறது. இந்த நிலை வைகாசி மாதக் காற்று வீசும் வரை நீடிக்கக்கூடும். கடும் வெப்பம் காரணமாக வடக்கில் ஒரு உயிரிழப்பு ஏற்படும் அளவுக்கு வெயிலின் தாக்கம் நிலவுகிறது.

காலம்-நமக்காகத் தன்னை மாற்றிக்கொள்ளாது. நாமே சூழ்நிலைகளை அனுசரித்துச் செயற்பட வேண்டும். ஒரு மரம் வளர்ப்பது என்பது பல நீண்ட செயற்பாடு. எனினும் அதன் பயனும் நீண்டது. ஆனால் ஒரு மரத்தைத் தறிப்பதென்பது வெகு சுலபம். அதுவும் நவீன கருவிகளுடன் ஒரு சில நிமிடவேலை. போதிய நிழல் இல்லாது வீதியில் ஒதுங்க இயலாதுள்ளது. இந்த நிலையில் கொடிகாமம் புகையிரத நிலையம் முன்பாக, மக்கள் வங்கி முன்பாக இருந்த பல வருட நிழல்தரும் மரம் ஒன்று கடந்த சில நாள்களுக்கு முன் அகற்றப்பட்டது கவலைக்குரியது. வீதி அகலிப்பு, நீர்க் குழாய் பொருத்தும் செயற்பாட்டால் இந்த நிலை ஏற்பட்டாலும் சற்றுக் கவனக்குறைபாட்டால் ஏற்பட்டதாகவே மக்கள் விசனப்படுகின்றனர். அந்த மரத்தின் கீழ் பேருந்துக்காக பலர் காத்திருந்த நிலையில் மரம் அகற்றப்பட்டமை கவலைக்குரியது.

மேலும் இந்த வெய்யில் நாள்களில் குடிதண்ணீர் பெறுவதும் நல்ல குடிதண்ணீர் கிடைப்பதும் சிரமமாக உள்ளது. முன்பு வீடுகள் தோறும் குடிதண்ணீர் மண் பானைகள் காணப்படும். நல்ல, குளிர்ந்த நீர் கிடைக்கும். எனினும் தற்போது வீடுகளின் மதில் உடன் நீர்க் குழாய்கள் வைத்துள்ளனர் பல நல்ல உள்ளங்கள். எனினும் அவற்றைக்கூடச் சிலர் சேதப்படுத்துவதும், நீர் இல்லாதவேளை திறந்த நீர்க் குழாயை மூடாது விடுவதால் கவனிக்காது நீர் இறைக்கும்போது நீர் விரயமாவதும் இடம்பெறுகிறது. இதுபோல சந்தை மற்றும் நகரங்கள், பேருந்து நிலையங்களில் குடிதண்ணீர்க் குழாய்கள் பராமரிப்பின்றியும் குறைவாகவும் காணப்படுகின்றன. பெருமளவு தண்ணீர் குடிப்பதற்கு அப்பால் கைகால் கழுவி விரயமாகிறது. எனவே ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடப்பதன் மூலமே உதவும் உள்ளங்கள் தொடர்ந்து தணணீர்க் குழாய்களைப் பராமரிக்க முன்வருவர்.

மற்றும் உணவகங்களில் கைப்பிடி இல்லாத செம்புகளில் குடிதண்ணீர் வைப்பதை தவிர்த்துக் கைப்பிடியுள்ள கிண்ணங்களை வைப்பதன் மூலம் சுத்தத்தைப் பேணமுடியும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ***நா. துஷாந் வரணி***

## தொடர்ச்சிகள்...

### முறிந்த...

மாலை 4.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம் பெற்றது. துன்னாலை வடக்கு வல்லியானந்தம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவபாதசுந்தரம் சிவசோமக்குமார் (வயது - 51) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்தார்.

கரணவாய் வீரப்பிராய் பகுதியில் உள்ள வீதி வழியாக லொறி ஒன்றும் மகிழுந்து ஒன்றும் எதிர் எதிர் திசையில் வந்துள்ளன. வளைவு ஒன்றில் திரும்பும்போது, வீதியோரமாக நடப்பட்டிருந்த மின்சார, தொலைபேசி கம்பத்தில் லொறி வாகனம் மோதி விபத்திற்குள்ளானது. கம்பங்கள் முறிந்து லொறி மீது சாய்ந்த வண்ணம் இருந்தன. இது தொடர்பில் மின்சார சபை மற்றும் சிறிலங்கா ரெலிக்கொம் என்பவற்றுக்கு நெல்லியடி பொலிஸாரால் அறிவிக்கப்பட்டது. மின்கம்பத்தை அகற்ற பணியாளர்கள் அங்கு அனுப்பப்பட்டனர். மின்கம்பத்தை அகற்றமுற்பட்ட சமயத்தில், விபத்துக்குள்ளான லொறியை சாரதி இயக்கினார். இதன்போது, லொறியில் சாய்ந்திருந்த மின்கம்பம் மின்சாரசபை ஊழியரின் தலை மீது விழுந்தது. மின்சார சபை ஊழியர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.5,26,173)

### முத்தம்...

கின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். வரவு- செலவுத் திட்டத்தின் இறுதி நாள் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். 'முத்தம் கொடுத்து கட்டிப்பிடித்து வாழ்த்து தெரிவித்தவரே, தற்போது விமர்சனம் செய்கின்றார். மிகவும் சிறந்த நிதியமைச்சர் என்று பன்னாட்டு விருது பெற்ற, நிதியமைச்சரை நீக்கிவிட்டுதான், புதிய நிதியமைச்சர் நியமிக்கப்பட்டார். புதிய நிதியமைச்சர் பழைய நிதியமைச்சருக்கு முத்தம் கொடுத்து வரவேற்றார். ஆனால், இந்த அரசின் இறுதி வரவு செலவுத்திட்டத்தையே, பழைய நிதியமைச்சர் விமர்சிக்கின்றார்' என்றார் மகிந்த. (ஓ.5)


இறுவெட்டு வெளியீடு
மண்கும்பான் வெள்ளைப்புற்றடி
அருள்மிகு
ஸ்ரீ வீரகத்தி விநாயகரின்
மஹா கும்பாபிஷேக சிறப்பு நிகழ்வு
நாளை (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை
பி.ப.2.00 மணிக்கு மண்கும்பான்
விநாயகர் மணிமண்டபத்தில் இடம்பெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுசரணை
புதிய நதியா நகைமாடம்
கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம்.




விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111
உதயன்


## மரண அறிவித்தல்

### திருமதி மங்களம்மா குமாரசாமி



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களம்மா குமாரசாமி நேற்று (05.04.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - செல்லாச்சி தம்பதிகளின் மகளும் குமாரசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, இராஜேஸ்வரன், நேசமலர், சுசீலாதேவி, சற்குணேஸ்வரன் மற்றும் ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சபாநாயகம், தயாவதி மற்றும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், மகேஸ்வரன், உதயகுமாரி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற தியாகராசா, கைலாயபிள்ளை, தர்மலிங்கம் மற்றும் இராசரத்தினம், நவரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கோதை, இளங்கோ, திருநந்தி, அகிலன், திலகன், சுபாஜினி, இரவிதாஸ், சபேசன், கல்பனா, அஜந்தன், ஆதவன், அபிராம், றொசானி, காலஞ்சென்றவர்களான தீபனா, கம்சிகன் ஆகியோரின் பேர்த்தியும் பிரதாபன், கஜன், கார்த்தி, மாதங்கி, மயூரிகா, பிரியங்கா, பக்ஷிகா, அம்ருதா, வைவிஸ்தா, கதிலன், மேதினிக்கா, வெண்பா, செங்கோ, கீர்த்தனன், அனுசிகா, நேகா, ஓவியா, அட்சணன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2019) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் கொம்பிகுளம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சரசாலை வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 527 9815**

## மரண அறிவித்தல்

### சொலமன் டானியல் இராசையா



மலர்வு 10.03.1936 — உதிர்வு 05.04.2019

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆய்வு கூட உதவியாளராக கடமையாற்றிய சொலமன் டானியல் இராசையா நேற்று (05.04.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கென்றி சொலமன் - ஞானம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற அமிர்தநாயகியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற செல்வராசாவின் அன்புச் சகோதரனும் தவமணியின் மைத்துனரும் றஜனி, அல்வின், நிரோஷினி, றவீந்திரறாஜ், சுறேந்திரறாஜ், ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தி, அன்ரனி ஆகியோரின் மாமனாரும் சாந்தினி செல்வசீலன், ஜெயசீலன், ஜெசிந்தினி ஆகியோரின் சிறியதந்தையும் ஜீவமணி, அன்ரன் ஆகியோரின் மாமனாரும் ஆரோன், ஏனோக், ஜெசிக்கா, ஆரணி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் இன்று (06.04.2019) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக வட்டுக்கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்

**தகவல்: குடும்பத்தினர்.**


**உலகின் தலைசிறந்த பிரித்தானிய பல்கலைக்கழகங்களின் பட்டக்கல்விகள் யாழ்மண்ணில்... IIS இல்....**

UGC APPROVED



UNIVERSITY of GREENWICH


**BSc (Hons)**
Computing
Computer Systems
& Networking

Leeds Trinity University

**BA (Hons)**
Business & Management
Business & Marketing



**MBA**
Master of Business Administration



GET YOUR CAREER ON TRACK...

*Admissions open for April Intake...* **Call us on : 021 222 8060**

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road , Jaffna
info@iis.edu.lk | www.iis.edu.lk

PIBT
Hotline:
071 777 4666
021 4900 900

**Why should you select IIS ?**
- IIS set high standards for teaching quality.
- The lecture panel consist of eminent academic and industry experts.
- Bank loan facilities and easy payment schemes.
- Industrial placement at leading companies.

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 02 . 1939

மறைவு 04 . 04 . 2019

### திருமதி முத்தம்மா பொன்னம்பலம்

கச்சாய், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் முன்னர் குஞ்சுப்பரந்தனை வசிப்பிடமாகவும் தற்போது டச்சுவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் தாயவள் கடந்த (04.04.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமாசிங்கம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சின்னப்பு - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னப்பு பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் சற்குணம், தர்மசீலன், பரமாசிங்கம், ரதிமலர், உதயமலர், பாஸ்கரன் ஆகியோரின் தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி (சாவகச்சேரி) எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**236/5, டச்சு வீதி,**
**சாவகச்சேரி,**
**யாழ்ப்பாணம். 077 305 9082**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 23136/15/17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 06 . 1930

இறப்பு 02 . 04 . 2019

### சண்முகம் பொன்னுத்துரை

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பொன்னுத்துரை கடந்த (02.04.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் (சீனத்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா, சின்னத்தம்பி, கந்தையா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரஞ்சிதமலர் (மாலா - பிரான்ஸ்), இராசேந்திரம் (மணிவண்ணன் - நோர்வே), நித்தியானந்தன் (மனோ - கொலண்ட்), சூரியகுமார் (அப்புச்சி - லண்டன்), சூரியகுமாரி (பபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தமூர்த்தி (பிரான்ஸ்), பவானி (நோர்வே), வசந்தமலர் (வசந்தி - கொலண்ட்), ஜெனித்தா (லண்டன்), பார்த்தீபன் ஆகியோரின் மாமனாரும் காயத்திரி - பாபு, வினோத்ராஜ், கஜானன், கம்சாயினி, சகானா, மதுசா, மதீஸ்வன், வாசவன், திவ்வியன் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஜெனிஷா, திஷான் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**83, மணியகாரன் ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு.**
**0212212076, 077 844 8726**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 23013/15/17)

## மரண அறிவித்தல்

# ஞா.பெ. அல்பிரெட் (சரவணன்)



சரவணை மேற்கைப் பிறப்பிடமாக கொண்டவரும் சென் ஜோசப் வித்தியாலயம் யாழ்ப்பாணம், சென். சாள்ஸ் மகாவித்தியாலயம், கொழும்புத்துறை, நவாலி சென் பீட்டர் வித்தியாலயம், ஆனைக்கோட்டை, ரோமன் கத்தோலிக்க பாடசாலைகளின் முன்னாள் அதிபரும், ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளரும் ஆகிய (கல்வி அமைச்சு, கொழும்பு). ஞா. பெ. அல்பிரெட் (சரவணன்) கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - சவிராசி தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், ரோசலின் (பூமணி), ரூபி (யாழ்ப்பாணம்), இராசதுரை மற்றும் அன்னம்மா (பிரான்சு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான திரு. விசுவாசம் (சரவணை), திரு. சிங்கராசா (யாழ்ப்பாணம்) மற்றும் திருமதி மேரி சிதம்பரபுரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான வி. இன்னாசிமுத்து (சிந்தனைச் செல்வன் - ஈழநாடு உதவியாசிரியர்), திரு. ஜேசுராஜா (இலங்கை போக்குவரத்துச்சபை - மன்னார்) மற்றும் சரவணையூர் விசு செல்வராஜா (அதிபர் - சர்வதேச தமிழ் வானொலி, பிரான்சு), திரு நாதன் (Jerina easy vouyage, பிரான்சு), இரத்தினசிங்கம் (யாழ்ப்பரணம்), பாலசிங்கம் (ஜேர்மனி), பொன்மணி (பிரான்சு), சுபாஷ் (பிரான்சு), டொனால்ட் (பிரான்சு), ஜோர்ச் (லண்டன்), சகாயமலர் (இத்தாலி), உஷா (பிரான்சு) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஆறாம் திகதி சனிக்கிழமை காலை எட்டு மணியிலிருந்து 17, கலிமா வீதி, யாழ்ப்பாணம் (ஒஸ்மானியாக்கல்லூரி முன்பாக) என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நாரந்தனை புனித சம்பேதுருவார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2.00 மணிக்கு திருப்பலி இடம்பெற்ற பின் நல்லடக்கத்துக்காக அவரது பூதவுடல் நாரந்தனை கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

**திரு. பாரதி (077 315 4188)**

**திரு. ஜோசப் (077 614 3133)**

**தகவல்:**

**சரவணையூர் விசு செல்வராஜா 076 983 4989**

YAMAHA
Revs Your Heart

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
விசேட சலுகை எம்மிடம் Yamaha மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் அதிஸ்டம்

நல்லூர் பின் வீதியில் (பருத்தித்துறை வீதி) அமைந்துள்ள எமது காட்சிக் கூடத்தில் பழையதை கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றை கொண்டு செல்லுங்கள்.

8 - 12 ஆம் திகதி வரை மட்டுமே.



மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கி
ரூபாய் 3.5 மில்லியனுக்கும் மேலான பெறுமதியுள்ள
Brand NEW
WAGONR ஐப் பரிசாக வெல்லுங்கள்



அத்துடன் பெறுமதியுள்ள வீட்டு எலக்ட்ரானிக் பொருள்களையும் வெல்லுங்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

DIGITAL ELECTROICE
62/16, Stanley Road, Jaffna.
Tel: 021 222 4040 Mob : 077 662 3824 Email: nraveen1981@gmail.com

தமிழ் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாட
குடும்பத்தில் உள்ள அனைவரும் விரும்பும்
ஆடைகள் ஒரே இடத்தில்

ABI Fashion World
அபி பஷன் வேல்ட்



இந்தியாவில் இருந்து புதுவருடத்திற்கு என இறக்குமதி செய்யப்பட்ட நவீன ஆடைத் தெரிவுகள் உங்களுக்காகவே...

3ஆவது தளத்தில் 40% விசேட தள்ளுபடி

வருடத்தில் குறைந்த விலை
வருடம் முழுவதும் நிறைந்த சேவை.
(விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்குட்பட்டது)

13.04.2019 வரை



7 நாள்கள் மட்டுமே

112, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)
021 222 3738 | 0773246503
(10)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

விசேட விலைக்கழிவு

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
இந்தியன் செலக்ஷனின்
சித்திரைப் புத்தாண்டு விசேட தள்ளுபடி

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



| | | |
|---|---|---|
| பட்டுச் சாறி | - ~~15000/=~~ | 7500/= |
| கொட்டன் சாறி | - ~~1800/=~~ | 1000/= |
| கொட்டன் Top | - ~~1500/=~~ | 1000/= |
| டெனிம் Top | - ~~1500/=~~ | 1000/= |
| பார்ட்டி புரொக் (பெரியது) | - ~~5000/=~~ | 3500/= |
| பார்ட்டி புரொக் (சிறியது) | - ~~3500/=~~ | 2500/= |
| கொட்டன் சல்வார் | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (பெரியது) | - ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் (சிறியது) | - ~~3500/=~~ | 1000/= |



இன்னும் பல புத்தம் புதிய டிசைன்களில்
கொட்டன் சாறிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சல்வார்கள், நெற் சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள், பார்ட்டி புரொக்ஸ், மொடன் சூட்ஸ், சேட், T-சேட், ரவுசர்

இம் முறையும் சித்திரைப் புத்தாண்டை
இந்தியன் செலக்ஷனுடன் குதூகலமாகக் கொண்டாடுங்கள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் : 23.03.2019 - 14.04.2019 வரை

## ANGEL INTERNATIONAL SCHOOL - MANIPAY
### தொழிற்துறைப் பயிற்சிநெறிகள்(TVC)

அரசஅங்கீகார NVQ தரத்திலான சான்றிதழ்களும் பாடத்திட்டமும் பின்பற்றப்படுகின்றன.

| பயிற்சிநெறிகள் | முழுநேரம் | பகுதிநேரம் |
|---|---|---|
| 1) Diploma in practical Electronics | 6 months | 12 Months |
| 2) Diploma in Human Resource Management (மனிதவளமுகாமைத்துவம்) | 6 months | 12 Months |
| 3) Diploma in Secretarial Science | 5 months | 10 Months |
| 4) Diploma in Business English | 6 months | 10Months |

2) (மனிதவளமுகாமைத்துவம்)
Required Qualification:A/L with Work experience

3) (அலுவலகபொருளியல்) (Receptionist, Administrative Officer, Secretary, Telephone operators)
Required Qualification: Minimum requirement 6 pass in O/L

4) (தொழில்துறைஆங்கிலம்)(special package can be given for group of working staff)
Required Qualification:A/L with Work experience/Graduates

**தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கற்றுக்கொடுக்கப்படும்.**
**விண்ணப்பமுடிவுதிகதி : 25/04/2019**

விண்ணப்பபடிவங்களை யாழ். மற்றும் மானிப்பாய் பாடசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலதிக தகவல்களுக்கு - 077 24 58 370**
**இணைப்பாளர் - தொழிற்துறைப் பயிற்சிகள்.**

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF AGRICULTURE,
## ARIVIYAL NAGAR, KILINOCHCHI

Walk-in interview for the appointments to the following posts will be held on 18.04.2019 at 09.30 a.m at the Board Room of Faculty of Agriculture, Ariviyalnagar, Kilinochchi.

Temporary Assistant Lecturer / Temporary Demonstrator **in Animal Science / Agricultural Biology/Agricultural Chemistry/ Agricultural Engineering/ Agricultural Economics/**

**Qualification:**

1. A Degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
   **OR**
2. A Degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   **OR**
3. (a) A Degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours and (b) a recognized postgraduate degree in the relevant subject.

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator only.**

**Salary Scale**

| | |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 45,092 p.m (Fixed) |
| Temporary Demonstrator | Rs. 37,010 p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, **NIC and self prepared applications.**

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 08.03.2019 அன்று
இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் ஆறுமுகம் மகேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (07.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**கட்டைப்புளியடி, கொற்றாவத்தை,
அல்வாய் மேற்கு, பருத்தித்துறை.**

(CS 23783)(14.17)

குடும்பத்தினர்.

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



08.10.2018 அன்று சிவபதம்
அடைந்த

### ஜெயக்குமார் சத்திஜா

அவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்
மதிய தானம் வழங்கும் நிகழ்வும்
07.04.2019 ஞாயிற்றுக்கிழமை
நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலய அருகில்
உள்ள திவ்ஜ ஜீவனசங்க மண்டபத்தில்
நடைபெறும்

**அனைவரையும் அன்புடன் வருமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.**

**குடும்பத்தினர்.**

## நீங்காத நினைவுகளுடன்
## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
15 . 07 . 1928

ஆண்டவன் அழைப்பில்
06 . 04 . 2017

### திருமதி அக்னஸ் யோசவ்

அம்மா எம் ஆருயிர்த் தாயே
அன்புக்கு இலக்கணமாய்
பண்பின் பிறப்பிடமாய்
தியாகத்தின் உறைவிடமாய்
பகிர்தலின் மாதிரியாய் வாழ்ந்த
எம் அன்புத் தாயே
ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
மூலவேரை நாம் இழந்து
மூச்சடைத்து நின்ற போது
ஆலமரமாய் நீ எழுந்து
அட்டதிக்கும் வியப்படைய
ஆனது அத்தனையும் எமக்களித்து

அரவணைத்து வழி நடத்திய எம் தாயே
கிள்ளி எடுத்தறியா உம் கரங்கள்
அள்ளிக் கொடுத்தே மலர்ந்த முகம்
சொல்லில் அடங்கா உன் தியாகம்
வெல்ல முடியாதே உன் யாகம்
பண்ணிய பகிர்தல் உமக்கு
புண்ணியமானது - நீர்
எண்ணிய வண்ணமுன்
பிள்ளைகள் உயர்ந்துனர்
அம்மா நீங்கள் மறையவில்லை
என்றும் எம்முடன் வாழ்கின்றீர்கள்
உயிருள்ளவரை உங்கள்
நினைவுகளுடன் வாழும்

"அன்னை இல்லம்"
புலோப்பளை கிழக்கு, பளை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
அருட்சகோதரி மரியமலர் யோசவ் AC

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.03.2019 சனிக்கிழமை சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவி

### திருமதி செல்லம் இராமு

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (06.04.2019) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 08.04.2019 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின் றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

**நீர்வேலி வடக்கு,
கம்பன்புலம்.**

(m.23405)(13.17)

**குடும்பத்தினர்**

## வேலை வாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன், வர்ணம் பூசுபவர் உடன் தேவை. நாள்/ கிழமை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு - 076 826 4859, 077 712 0945

## றொட்வீலர் நாய்குட்டிகள் விற்பனைக்கு உண்டு

இரண்டு மாத வளர்ச்சியடைந்ததும் தடுப்பூசி ஏற்றப்பட்டதுமான றொட்வீலர் நாய் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு.

(CS 24519)(04.07)

077 229 2436

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
முன்னாள் அதிபர்

### ஜி.பி.அல்பிறட்

(ஓய்வு நிலை கல்விப்பணிப்பாளர்.
தமிழ்த்துறை, கல்வியமைச்சு
இசுறுபாய)

அவர்களின் மறைவு குறித்து
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யாழ் கொழும்புத்துறை
சென் ஜோசப் வித்தியாலயம்

(CS 24508)(04.17)

## பெண் வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் உடன் தேவை.

**வயது** :- 18 தொடக்கம் 30 வரை
**வேலை நேரம்** :- காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை

தொடர்பு-076 118 4010

## வகுப்புகள்

**பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல்**

**தரம் 6 - O/L வரை**

சகல பாடங்களும் வீடு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு - 075 234 7120

## காணி விற்பனைக்கு

யாழ் நகரில் கடைத்தொகுதிகளுக்கு அண்மையில் கொட்டடிச் சந்தியில் கடைகள், களஞ்சியம் கட்டக் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(நல்ல விலை எதிர்பார்க்கலாம்)

- 77 941 6766

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14 . 02 . 1943

மறைவு
07 . 04 . 2008

### அமரர் சுப்பையா கணேசு

வாழ்க்கைப் பாதையின் வழி நெடுந்தூரமும்
நெறி தவறா வார்த்தையால் எம்மை வளர்த்த
எம் அன்பு அப்பாவின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

டச்றோட்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
13 . 11 . 1934

இறப்பு
17 . 04 . 2018

திதி-06.04.2019

யாழ்.ஏழாலை தெற்கு களபாவோடையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

திருமதி

### தங்கைச்சிப்பிள்ளை சிங்கராசா

அவர்களின் 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி.



ஆண்டொன்று ஆனதம்மா
ஆனாலும் ஆறமுடியவில்லை எம்மால்
விண்ணுலகில் வாழ்ந்திடினும் நினைவுகளால்
எம்மனதில் வாழ்ககின்ற எம் குலவிளக்கே!
எம் தெய்வமே!
உங்களை நினைக்கையில்
நித்தமும் நிம்மதி இழந்து
துடிக்கின்றோம்.
எம் ஆருயிர் அன்னையே!

உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டிநிற்கும் உங்கள்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொடர்புகட்கு
மகள் - சுசீலா +4915129999179 மகன்- உதயச்சந்திரன் +447404152183
மகன் - உதயசீலன் +94777789974







# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472



## 31 ஆம் நாள் நினைவு தினம்



தாயின் மடியில்
13 . 04 . 1945

மகிமைக்குள்
06 . 03 . 2019

### திருமதி மேரி நற்குணம் பாலசுப்பிரமணியம்
(சுண்டுக்குளி)

நல்ல போராட்டத்தினை போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.
2தீமொத்தேயு 4: 7

இப்பூவுலகில் வாழ்ந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி மேரி நற்குணம் பாலசுப்பிரமணியம் அவர்களின் இப்பூவுல வாழ்வுக்கும் அவரது பணிக்குமான நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (06.04.2019) சனிக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் (சுண்டுக்குளி) நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது துயரின் போது வீட்டுக்கு வருகைதந்தும், தொலைபேசியூடாக ஆறுதல் கூறி எம்மைத் தேற்றியவர்கள் மலர்வளையம், துண்டுப்பிரசுரங்கள், பனர்கள் மூலம் தமது அனுதாபத்தினை வெளிப்படுத்தியோர், வெளிநாட்டிலிருந்து தொலைபேசியூடாக அனுதாபத்தை வெளிப்படுத்தியோர், ஜெபத்தில் தாங்கியோர், ஆராதனை நடத்திய திருச்சபையினர், இறுதிப்பயணத்தின் போது கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இல.113, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
077 670 1168

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி புனிதவதி சந்திரசேகரம்



மண்ணில் மலர்ந்தது
19.11.1939

விண்ணில் கலந்தது
17.03.2018

எங்கள் வீட்டுக் குலவிளக்காய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் மாசற்ற அன்பிற்கு இலக்கணமாய்
எங்கள் வாழ்வின் விடிவெள்ளியாய் வாழ்ந்து
எம்மை எல்லாம் வழி நடத்திய எங்கள் இல்லத்தரசியே
ஏன் எம்மை சடுதியாய் விட்டுப் பிரிந்தாய்?
காணும் இடம் எல்லாம் உங்கள் புன்முறுவல்
எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டகலாது ஒவ்வொரு கணமும் உம்மை நினைந்து
நினைந்து எம் கண்ணீர்ப் பூக்கள் சொரிகின்றோம்.எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய நெஞ்சுருகி நித்தம் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம் சாந்தி!!!

அன்புள்ள உம் கணவரும் உன் மீது பாசம் உள்ள உமது உறவுகளும்

இன்று (06.04.2019) சனிக்கிழமை நடைபெறும் சமயச்சடங்குகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி.சந்திரசேகரம்
மற்றும் அன்னாரின் உறவுகளும்.
077 996 7142

## மரண அறிவித்தல்



### தயாளன் சசிகலா

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மதுரையை வசிப்பிடமாகவும் கொண்ட தயாளன் சசிகலா 04.04.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - சரஸ்வதி (சிறிமா) தம்பதியரின் மூத்த மகளும் தயாளனின் பாசமிகு மனைவியும் சரவணபவா (BE,(CSE), USA), துதேஷன்பவா (MBBS.DIA.D.COS. (USA) PAVA Clinic), குகனேசன் (டிரைவர்), ததீசன் (MBA. Aritel), சிவதர்சினி (Mca சாப்ட்வோர்) ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.04.2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணிதொடக்கம் 3.00 மணிவரை மதுரை கோயில் பாப்பாக்குடி அன்னை நகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ததீசன் +919 952 374 499

# அடைக்கலநாதனின் உரையை அந்தணர் ஒன்றியம் கண்டிப்பு

வவுனியா, ஏப். 6

செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றில் ஆற்றிய உரைக்கு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

நடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடந்த நாடாளுமன்ற அமர்வில் பேசும்போது யேசுநாதர் மக்களின் பாவங்களைத் தானே சுமந்து தன்னுயிரை இழந்தார் என்று சொல்லப்படுகின்றது. அது போல சிவபெருமானின் கையிலே இருக்கும் பிச்சைப் பாத்திரத்தின் மூலம் அவர் மக்களின் வீடு வீடாக சென்று அவர்களின் பாவங்களை ஏற்றுக்கொண்டு புண்ணியங்களைச் செய்தார் என்று கூறப்படுகின்றது என்று கூறியிருந்தார்.

அதற்கே அந்தணர் ஒன்றியம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதுபற்றி அந்தணர் ஒன்றியச் செயலர் ஜெ.மயூரக்குருக்கள் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செல்வம் அடைக்கலநாதன் சைவசமயத்தின் அடிப்படை தெரியாது தவறாக பேசியிருக்கின்ற பேச்சு சைவமக்களினது மனங்களில் மாறாத வடுவாக மாறியுள்ளது.

அண்மைக்காலமாக தமிழ் மக்களுக்கும் இந்துசமயம் சார்ந்த ஆலயங்களுக்கும் பல அச்சுறுத்தல்கள் வந்த வண்ணம் உள்ளன. இதனை அரசியல் வாதிகள் தலையிட்டோ அல்லது ஆறுதலாகவோ ஏன் ஒரு வார்த்தைகள் கூடப் பேசவில்லை என்பது எமக்கெல்லாம் மிகுந்த வேதனைகளைத் தருகின்றது.

அதுவும் மாதோட்டத்தின் தொன்மை வரலாறுகளை கிரேக்க சீன, இந்திய வரலாறுகளில் நாம் தெளிவாகப் பார்க்கலாம் ஏன் ஈழத்து வரலாற்றில் கூடப் பார்க்கலாம். ஆனால் ஈழத்தில் தமிழரது வழிபாட்டுத் தொன்மங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. இது மனவேதனையானதாகவும், கேட்பாரற்ற செயலாகவும் தொடர்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

தேசியத்தை மதிப்பவர்கள், தமிழினத்தை வழிநடத்திய தலைமையை மதிப்பவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கூறுபவர்கள் ஒன்றைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வெண்டும். அந்தக் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற இடமளிக்கப்படவில்லை. இன்று புதிதாய் முளைத்து நிற்கும் இது போன்றவை, அன்றைய காலத்தில் அனுமதிக்கப்படவில்லை என்ற உண்மையை விளங்க வேண்டும்.

பிறப்பால் இந்துவாக இருக்கும் செல்வம் அடைக்கலநாதன் அடிப்படைச் சமய அறிவுகூட இல்லாமலா இவ்வாறான கருத்தை நாடாளுமன்றில் கதைத்திருக்கிறார். விளக்கம் தெரியாது விடின் பேசாமல் இருந்திருக்கலாம் அல்லது தெரிந்தவர்களிடம் விளக்கம் கேட்டிருக்க வேண்டும். நாம் பேசுகின்ற போது அறிந்து பேசுவதுடன் முதலில் நிதானம் மிக முக்கியம். சொன்ன வார்த்தைகளைத் திரும்பப் பெற முடியாது. ஆகவே இவர் இவ்வாறான சித்தரிப்புக் களை செய்வதனை உடனடியாக நிறுத்த வேண்டும். எனவே இத்தகைய பேச்சினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-110)

# பிரபாவின் பேச்சைக் கேட்டிருந்தால் முஸ்லிம்கள் வடக்கில் இருந்திருப்பர்!

## ஐ.தே.க. உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு ஏப். 6

புலிகளின் தலைவர் பிரபாகரனின் பேச்சைக்கேட்டு செயற்பட்டிருந்தால் முஸ்லிம்கள் இன்றும் மன்னாரில் வாழ்ந்திருப்பார்கள். அப்போது வில்பத்து பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

என்றாலும் நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாக்க செயற்பட்டதால் விடுதலைப் புலிகளால் விரட்டப்பட்டார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

வில்பத்தைப் பாதுகாத்து சரணாலய பகுதியில் முஸ்லிம் மக்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். சமூகத்தைப் பிழையாக வழிநடத்த சிலர் முயற்சிக்கின்றனர். வில்பத்து சரணாலயம் அமைந்திருப்பது அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டத்தில். ஆனால் தற்போது மக்கள் குடியமர்த்தப்பட்டிருப்பது மன்னார் மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில்.

போர்க் காலத்தில் மன்னாரிலிருந்து விடுதலைப்புலிகளால் விரட்டப்பட்ட மக்கள் தெற்கில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். 1990இல் தங்கள் சொந்த இடத்தைவிட்டு வெறும் கைகளுடன் வெளியேறிய அந்த மக்கள் போர் நிறைவடைந்த பின்னர் 2013இல் மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டனர். அத்தகைய நிலையில் சூழலியல் வாதிகள் பொய்க் குற்றச்சாட்டு தெரிவித்து வில்பத்து சரணாலய காட்டை அழித்துஅந்த மக்களை குடியேற்றியுள்ளனர் என்று பரப்புரை செய்கின்றனர். 1990களில் தங்கள் சொந்த இடங்களில் இருந்து சென்று 2013இல் மீண்டும் வருகின்றனர். அந்தப் பகுதிகள் பெரும் காடாக இருந்தன.

2012இல் அந்த பிரதேசங்களை வனப் பாதுகாப்பு பிரதேசமாக அரசிதழில் அறிவித்தல் விடுக்கப்பட்டது. அதையடுத்தே காடழிப்பதாகச் சூழலியல்வாதிகள் பரப்புரை செய்கின்றனர். எனவே இது காடழிக்கும் பிரச்சினை யல்ல. இனவாதத்தை தூண்ட மேற்கொள்ளும் நடவடிக்கை - என்றார்.

(த-31)

## விவசாயத்துறை சுயமாக இருக்குமா?

*டக்ளஸ் எம்.பி. கேட்கிறார்*

விவசாயத்துறை இன்னும் சில காலங்களில் தொல்பொருள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று நாடாளுமன்றில் நேற்று முன்தினம் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டாந்தரையான இந்த நாட்டின் பொருளாதார வெளியில், வரவுகளை எதிர்பார்த்து, செலவுகளை அதிகரித்து முன்வைக்கப்பட்டுள்ள பாதீடு மக்களின் வாழ்வில் பசுமையான எதிர்காலத்தை எவ்வாறு உருவாக்கப் போகின்றது?நாட்டு மக்கள் மீது கடன் சுமைகளைச் சுமத்திவிட்டு, கடன் சுமைகளிலிருந்து விடுவிக்கப்படக் கூடிய காலம் எப்போதாவது வருமா? என்றார்.

(த)

# மக்கள் கிளர்ந்தெழுவதைத் தடுப்பதே பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட நோக்கம்

## அரசைச் சாடுகிறது தேசிய புத்திஜீவிகள் அமைப்பு

கொழும்பு, ஏப். 6

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் உண்மையான நோக்கம் பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது அல்ல. மாறாக இந்த ஊழல் நிறைந்த அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து போராடுவதைத் தடுப்பதே என்று தேசிய புத்திஜீவிகள் அமைப்பு சாடியுள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள அவகாஷ நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய புத்திஜீவிகள் அமைப்பைச் சேர்ந்தவரும், சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளருமான அனில் ஜயந்த தெரிவித்ததாவது:

பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கருத்தை ஆதரிக்கின்றோம். அதற்குப் பதிலாக அரசு கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இதன் ஊடாக பாதுகாப்புப் படையினர், பொலிஸாருக்கு அதிகளவிலான அதிகாரங்கள் வழங்கப்படும் அதேவேளை, பொதுமக்களின் உரிமைகள் பாதிக்கப்படும்.

தற்போதைய அரசு மக்களுக்கு அவசியமான வசதிகளை வழங்குவதை விடுத்து, தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கே முயன்று வருகின்றன. மக்கள் அரசுமீது கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். ஊழல் நிறைந்த அரசாக மாறியுள்ளது. அவ்வாறிருக்க எதிர் காலத்தில் மக்கள் தமக்கு எதிராகக் கிளர்ந்து எழுவதைத் தடுக்கும் நோக்கிலேயே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றார்கள்.

ஏனைய நாடுகளில் தீவிரவாத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. எம்முடைய நாட்டிலும் அத்தகைய தீவிரவாதச் செயற்பாடுகள் உருவாகும் வாய்ப்புக்கள் உள்ளன. அதனைத் தடுப்பதற்காகவே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை கொண்டு வருகின்றார்கள் என்ற எண்ணத்தை மக்கள் மனங்களில் தோற்றுவிப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது. மின்தடை, பொருள்களின் விலையுயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மக்களும் இந்த விடயத்தில் அக்கறை காண்பிக்காமல் இருப்பது அரசுக்கு சாதகமானதாக அமைந்துள்ளது.

அவரைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இலங்கைத் திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் அதுரு சிறிசமரகோன்,

அரசு கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் பயங்கரவாதச் செயல்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை ஏற்க முடியாதுள்ளது. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை பயங்கரவாதச் செயல் என்று வரையறுத்திருக்கின்றார்கள். - என்றார்.

(த-61)

# போதைப்பொருள் கடத்தல்காரரை சட்டத்தரணிகள் காப்பாற்றக்கூடாது

## எதிர்க்கட்சிகளின் முதன்மைக் கொரடா கோரிக்கை

கொழும்பு, ஏப். 6

போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள உலகத்தாரை பாதுகாக்க சட்டத்தரணிகள் முன்வரக்கூடாது என்று எதிர்க்கட்சிகளின் முதன்மைக் கொரடா மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பாதீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் திணைக்களத்துக்கு இருந்துவந்த அவப்பெயரை நீக்குவதற்கு அரச தலைவருக்கு முடியுமாகியுள்ளது. கடந்த காலங்களில் பொலிஸார் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் நல்லெண்ணம் இருக்கவில்லை. பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. அண்மைக்காலமாக அந்த நிலைமாறி பொலிஸார் தொடர்பில் பொது மக்களுக்கு நல்லெண்ணம் ஏற்பட்டுவருகின்றது.

நாட்டில் பொலிஸாரின் சேவை போற்றத்தக்கது என்பது பொலிஸாரை மதிப்பளிக்க அரசதலைவர் எடுத்த நடவடிக்கையின் மூலம் அனைவருக்கும் தெரியவர ஆரம்பித்தது. அதேபோன்று நாட்டில் போதைப்பொருளை ஒழிக்கும் வேலைத்திட்டத்துக்கு பொலிஸார் பெருமளவில் முன்னின்று செயற்படுகின்றனர். போதைப்பொருளுக்கு எதிரான அவர்களின் நடவடிக்கையை பொது மக்களும் போற்றி வருகின்றனர்.

பொலிஸார் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் போதைப் பொருள் கடத்தல்காரர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் முன் நிறுத்தும்போது, அவர்களுக்காக எமது சட்டத்தரணிகள் முன்வந்து பிணை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கின்றனர். போதைப்பொருள் வியாபாரிகள் பெருமளவில் பணம்கொடுத்து சிறந்த சட்டத்தரணிகளை முற்படுத்தி மேற்கொள்கின்றனர்.

நாட்டைச் சீரழிக்கும் போதைப்பொருள் கடத்தல் காரர்கள், பாதாள உலகத்தார் போன்றவர்களுக்காகச் சட்டத்தரணிகள் முன்வரக்கூடாது. அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்க இடமளிக்க வேண்டும். போதைப்பொருளை ஒழிக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் இருக்கின்றனர். இதற்காக அரசதலைவர் முன்னின்று செயற்பட்டு வருகின்றார் - என்றார்.

(த-31)

# கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கொழும்பில் ஊழியர்கள் போராட்டம்

கொழும்பு, ஏப். 6

ஊழியர்களுக்கான ஓய்வூதியத்தை முறையாக வழங்கக் கோரியும் அரச வங்கிகளுக்கான நியமனங்களை அரசியல் தலையீடுகள் இன்றி அரசு நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் கொழும்பில் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது.

இலங்கை சேமிப்பு வங்கி மற்றும் சம்பத் வங்கியின் ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். கோரிக்கைகளை உள்ளடங்கிய மனுவை அரசதலைவர் செயலகத்தில் கையளித்தனர்.

கோட்டை தொடருந்து நிலையத்துக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் ஹில்டன் சுற்று வட்டம் ஊடாக அரசதலைவர் செயலகத்தை நோக்கி பேரணியாக நகர்ந்தது.

வங்கி ஊழியர்களின் ஓய்வூதியம், முறையற்ற வரி அறவீடுகள், அரச வங்கிகளுக்கான ஊழியர்களை இணைத்துக் கொள்ளும் போது அரசியல் தலையீடு இன்றி கொள்கையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும், இலங்கை சேமிப்பு வங்கியை முறையாக இணைத்துக் கொள்ளல், தொழிலாளர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் உத்தேச தொழிற் சட்டத்தை உடனடியாக நிறுத்த வேண்டும், தொழிற் சங்கங்களின் போராட்டங்களைக் கட்டடப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்றும் கோசங்களை எழுப்பினர்.

பொலிஸார் அவர்களை நகராது தடுத்து நிறுத்தினர்.

பின்னர் ஐந்து பேர் உள்ளடங்கிய குழு அரசதலைவர் செயலகத்துக்குச் சென்று மனுவை வழங்கியது.

(த-61)



## ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல்

சாவகச்சேரி, ஏப்.6
மட்டுவில் சபீனா முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் மட்டுவில் அ.த.க.பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன் முதன்மை விருந்தி னராகக் கலந்துகொண்டு ஆக்கப் பொருள்களின் காட்சிக்கூடத்தைத் திறந்து வைத்தார்.
பெருமளவு மாணவர்களும் பெற்றோரும் காட்சிக்கூடத்தில் வைக்கப்பட்டிருந்த ஆக்கப் பொருள்களைப் பார்வையிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## பிரிவுபசார நிகழ்வு

சாவகச்சேரி ஏப்.6
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடமையாற்றி கொழும்பு மருத்துவமனைக்கு இடமாற்றல் பெற்றுச் சென்ற மருத்துவர் இ.றிஷான், மருத்துவர் திருமதி நீரஜா றிஷான் ஆகியோருக்கான பிரிவுபசார நிகழ்வு மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை மருத்துவ அத்தியட்சகர் திருமதி மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. (ஐ-9)



## பிரிவுபசார நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.6
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியால யத்தில் கடமையாற்றி இட மாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான பிரிவு உபசார நிகழ்வு பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.ஆசிரியர்களான திருமதி சு.மகேந்திரராஜா, திருமதி சு. உதயச்சந்திரன்,அ.டேவிற்சன் ஆகியோருக்கான பிரிவு உபசார நிகழ்வே இடம்பெற்றது. (ஐ)

## பெருந்திருவிழா

வடமராட்சி,ஏப்.6
வடமராட்சி அல்வாய் கிழக்கு பெருங்கலட்டி தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற்று, எதிர்வரும் 14 அம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-124)

# மகனை மீட்கும் எனது போராட்டம் தொடரும்

## விடுதலையான ஜெயக்குமாரி திடம்


யாழ்ப்பாணம், ஏப்.6
5 வருடங்களின் பின்னர் பதவியா நீதிவான் நீதிமன்றத்தால் நிரந்தரமாக விடுதலை செய்யப்பட்ட பாலேந்திரன் ஜெயக்குமாரி காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை மீட்க தொடர்ந்தும் போராடுவேன் என்று உதயனுக்குத் திடமாகத் தெரிவித்தார்.



புலிகளை மீளுரு வாக்கம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் 2014 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்பு பொலிஸ் பிரிவினராலும் மற்றும் இராணுவ, பொலிஸ் அலுவலர் கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து ஜெயக்குமாரி கைது செய்யப்பட்டார்.
அவருடன் சேர்த்து அவரது ஒரே ஒரு மகளான விபூசிகாவும் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். மற்றும் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். ஆயினும் விபூசிகா சில தினங்களில் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தால் கிளிநொச்சி சிறுவர் இல்லம் ஒன்றில் சேர்க்கப்பட்டார்.
ஒருவருடமாக ஜெயக்குமாரி தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 2015ஆம் ஆண்டு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். வெளிநாடு செல்லக்கூடாது. அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு நாளும் கையொப்பம் இடவேண்டும் என்ற நிபந்தனையுடன் கொழும்பு நீதிமன்று ஜெயக்குமாரியை பிணையில் விடுவித்திருந்தது.
அந்த வழக்கு கடந்த புதன்கிழமை பதவியா நீதிமன்றில் இடம்பெற்றது. குற்றப்புலனாய்வுப் பிரிவால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து நிரந்தரமாகவே ஜெயக்குமாரி விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. ஜெயக்குமாரியுடன் மேலும் இரு சந்தேக நபர்களும் விடுதலை செய்யப்பட்டனர். சட்டத்தரணிகளான வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் அஜித் திசாநாயக்க ஆகியோர் சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்தனர்.
இறுதிப்போரில் தனது இரண்டு மகன்களை இழந்தவர் ஜெயக்குமாரி, மூன்றாவது மகன் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். அவர் பூசா சிறையில் இருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன என்று தெரிவித்த ஜெயக்குமாரி காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேட ஆரம்பித்தார். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடைய ஆர்ப்பாட்டங்களின் போதெல்லாம் ஜெயக்குமாரி முன்னின்று அதில் கலந்து கொள்வார். பிரிட்டனின் முன்னாள் தலைமை அமைச்சர், டேவிட் கமருன், ஐ.நா. மனிதஉரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிளை போன்றவர்கள் இலங்கைக்கு வருகை தந்தபோதெல்லாம் ஜெயக்குமாரி போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார். போரின்போதும் அதன் பின்னரும் நடந்த சம்பவங்களை அவர் அந்த அதிகாரிகளிடத்திலே தெட்டத்தெளிவாகக் கூறியிருந்தார். இந்தப் பின்னணியில் அவர் 2014ஆம் ஆண்டுகைது செய்யப்பட்டார். தற்போது அவர் அந்த வழக்கில் இருந்து நிரந்தரமாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
இது தொடர்பில் உதயனுக்குத் தெரிவித்த அவர், "மகனைக் காணவில்லை என்று தேடிய என்னை காரணம்கூறாது கைது செய்தார்கள், பின்னர் ஒரு காரணத்தைக் கூறி சிறையில் அடைத்தார்கள், மிகவும் சிரமப்பட்டுப் பிணையில் விடுதலையானேன். அதன்பின்னரும் பொலிஸ்நிலையம், நீதிமன்றம் என அலைந்தேன். மகனைத் தேடிய எந்தத் தாய்க்கும் இவ்வாறு நடக்ககூடாது. இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ளேன். எனது மகனை மீட்க நான் தொடர்ந்தும்போராடத்தான் போகிறேன். மகன் எனக்கு வேண்டும். என்னநடந்தாலும் நான் போராடுவேன்." என்றார். (எ-21,6)

## மகளிர் தின விளையாட்டு நிகழ்வுகள்

கொடிகாமம், ஏப்.6
பன்னாட்டு மகளிர்தினத்தை முன்னிட்டு கைதடி வடகிழக்கு செல்வா மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
சங்க விளையாட்டு மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவி திருமதி விநாயகமூர்த்தி தேவி தலைமையில் நடைபெறவுள்ளன.
நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன், சிறப்பு விருந்தி னர்களாக பன்னாட்டு செல்வா நிலைய பிரான்ஸ் கிளைத் தலைவர் சி.தங்கதுரை, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்சு.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)



## சிறார்களுக்கான சித்திரப் பயிற்சி

தெல்லிப்பழை, ஏப். 6
தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கான சித்திரப் பயிற்சியும், போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. பிரதேச செயலர் ச.சிவசிறியின் வழிநடத்தலில் பிரதேச ஆரம்பப் பிள்ளைப் பருவப் பிரிவால் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது. (ஐ-9)




## சேவைநலன் பாராட்டு நிகழ்வு

கொடிகாமம், ஏப் .6
கரம்பைக்குறிச்சி ஜே/342 கிராம அலுவலர் பிரிவில் ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றல் பெற்றுச் சென்றவர்களுக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கரம்பைக்குறிச்சி கிராம மக்களின் ஏற்பாட்டில் கரம்பைக்குறிச்சி மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கிராம நிர்வாக அலுவலகர் வி.சிவசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக வரணி வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் எஸ்.மதன், தென்மராட்சி பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
பாராட்டு பெறும் விழா நாயகர்கள் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-159)

## கொடியேற்றம்







திருநெல்வேலி அரசடி சிறி சிவகாம சுந்தரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 15 நாள்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. (ஐ-37)



# அச்சுறுத்திய யானை திடீரென உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஏப்.6

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் மற்றும் முத்துஐயன்கட்டு கரிப்பட்ட முறிப்பு ஆகிய இடங்களில் விவசாயிகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்தி வந்த யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

கற்கிடங்குப் பகுதியில் வீதியோரம் அந்த யானை உயிரிழந்து கிடந்தமை தொடர்பாகக் கிராம வாசிகள் மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தனர். மாங்குளம் பொலிஸார் அது தொடர்பாக வன ஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

யானை உயிரிழந்தமை தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவ அதிகாரி மருத்துவ பரிசோதனை மேற்கொண்டபோது யானையின் கால் மற்றும் உடல் பகுதிகளில் பல இடங்களில் குண்டு துளைக்கப்பட்டுள்ள அடையாளம் காணப்பட்டுள்ளது. காலில் இருந்து குண்டு ஒன்றையும் எடுத்துள்ளார்.

இந்த யானை குண்டுபட்டே உயிரிழந்திருக்கலாம் என்றும் 30 அகவையுடைய இந்த யானை திடகாத்திரமானது என்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். யானையை அந்தப் பகுதியில் புதைக்க வேண்டும் என்றும். அதற்குரிய ஏற்பாடுகளை கிராம அலுவலர் மேற்கொள்ள வேண்டும் என்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-ரி3)

# கூட்டுறவுப் பரிணமிப்பு 2 வேலைத்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 6

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் இந்த ஆண்டுக்கான பரிணமிப்பு 2 வேலைத்திட்டங்கள்யாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற ஐந்து மாவட்டங்களிலும் உள்ள கூட்டுறவுஅமைப்புக்களை அபிவிருத்திசெய்யும்திட்டத்தின் கீழ் இந்தக் கூட்டுறவின். பரிணமிப்பு என்ற வேலைத்திட்டங்கள் கடந்த 2018ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வேலைத் திட்டங்கள் மாவட்டத்தின் ஒவ்வொரு கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர்அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டின் இந்தக் கூட்டுறவின் ப்ரிணமிப்பு1வேலைத்திட்டங்கள் ஊடாக சங்கங்கள் அதிக முன்னேற்றத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

குறிப்பாககூட்டுறவுதொடர்பாகமக்களுக்கானவிழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டன. இதன் முன்னேற்பாடாக கடந்தஆண்டில்மட்டும்23 ஆயிரத்து468பேர்கூட்டுறவில் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டனர். அத்துடன் 2017ஆம் ஆண்டில் 9ஆயிரத்து208பேர்வரையில் கூட்டுறவில் அங்கத்தவர்களாக இணைந்தும் உள்ளனர்.

இந்தத் தரவுகளின் அடிப்படையில் 2017ஆம் ஆண்டைக் காட்டிலும் 2018ஆம் ஆண்டில்இவ்வாறுவடக்கு மாகாணத்தில் கூட்டுறவில் அங்கத்தவர்களாக இணைந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டன. இந்த ஆண்டில் 33 ஆயிரத்து80ஆகஅதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

மக்கள்இடையேகூட்டுறவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் அங்கத்தவர்களை மேலும் இணைப்பதற்கு கொள்கை பரப்புரைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கூட்டுறவின் பாலம் ஊடாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பொருத்தமானகிளைகளில்அங்கத்தவர்களை இணைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-17)

# சிங்களக் குடியேற்றங்களை தடுக்க ஆவண செய்யுங்கள்

## வவுனியா மக்கள் கோரிக்கை

வவுனியா, ஏப்.6

வவுனியா, வடக்குப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் பிரதிநிதிகள் காத்திரமான நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

போரின் பின்னர் வவுனியா வடக்கில் தமிழர்களின் பாரம்பரியமான கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் மாற்றப்பட்டு அங்கு பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்படுகின்றனர்.

தமிழ்க் கிராமங்களான கச்சல்சமனங்குளம், ஊற்றுக்குளம் ஆகிய இடங்களிலும் சில மாதங்களின் முன்னர் சிங்களக் குடியேற்றங்களை நிறுவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

போரின் வடுக்களைச் சுமந்த நிலையில், வாழ்வாதாரங்கள் இன்றி நாம் உள்ள நிலையில் எமக்கு எதுவித வசதிகளும் இதுவரை செய்துதரப்படவில்லை.

ஆனால் புதிதாகக் குடியேற்றப்படும் பெரும்பான்மையின மக்களுக்கு அனைத்து உதவிகளும் அரசால் வழங்கப்படுகின்றன.

இவை தொடர்பில் வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் காத்திரமான நடவடிக்கைகள் எவற்றையும் முன்னெடுக்காத நிலமையே காணப்படுகின்றது.

அவர்கள் வெறுமனே அறிக்கையை மட்டும் வெளியிடுகின்றனர். ஆக்கபூர்வமாக எதையும் செய்யவில்லை.

தமிழர் பிரதேசங்களில் இன விகிதாசாரம் மாற்றியமைக்கப்படுவதற்கு முன்பாக அனைத்து அரசியல்வாதிகளும் கட்சி பேதங்களைக் களைந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். எல்லைக் கிராமங்களுக்குச் சென்று அங்கு நடப்பவற்றை நேரில் அவதானித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-110)

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 6

அராலி மத்தி சிறி முருகன் சனசமூக நிலையத்தின் 79ஆவதுஆண்டுநிகழ்வை முன்னிட்டு ஈருருளி, மரதன்ஓட்டப்போட்டிகள்இடம் பெறவுள்ளன.

நிலையமுன்றலில்நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6மணியளவில்போட்டிகள் ஆரம்பமாகிநடைபெறவுள்ளன.

நிகழ்வில் இருபாலாருக்குமான வடக்கு மாகாணம் தழுவிய ஈருருளியோட்டம், ஆண்களுக்கானமரதனோட்டம், சிறுவர்களுக்கான வீதியோட்டம், முதியோர்களுக்கான ஓட்ட நிகழ்வுகள், மெதுவான உந்துருளி ஓட்டம் என்பன நடைபெறவுள்ளன. (ஐ)




லண்டனைச் சேர்ந்த ரூபாகரனின் நிதி உதவியில், கிளிநொச்சி உருத்திரபுரத்தை சேர்ந்த போரினால் தாயினை இழந்து தந்தையின் அரவணைப்பில் வாழும் ஐந்து பிள்ளைகளில், ஒருவருக்கு கல்வி மேம்பாட்டு கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (க-222)

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப் 6

லிற்றில் மாஸ்ரேஸ் பாலர் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வு முன்பள்ளி மைதானத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் இடைக்காடு மகா வித்தியாலய ஆங்கில பாட மூத்த ஆசிரியர் பொ.தவராஜா கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் அளவெட்டி ஈஸ்வரன் முன்பள்ளி மழலைகளின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு முன்பள்ளிமைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற வுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-63)

# விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், ஏப் .6

கைதடி மத்தி குமரநகர் நிறைமதி முன்பள்ளி சிறார்களின் வருடாந்தவிளையாட்டுநிகழ்வு அண்மையில் குமரநகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

கைதடி மத்தி சனசமூக நிலையத் தலைவர் பா.மோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சு.கேதீஸ்வரன் உட்பட கிராம மட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஐ-159)

# வன்முறைகளை கண்டித்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.6

இந்து சமயத்துக்கு எதிரான தொடர் வன்முறைகளைக் கண்டித்து இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மருதனார்மடம் சிறி சுதந்தர ஆஞ்சனேயர் ஆலய முன்றலில் கண்டனப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று இந்து அமைப்புக்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. அதில் அனைவரையும் கலந்துகொள்ள வேண்டும் என்று அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (எ)

# பொன்விழா

யாழ்ப்பாணம்,பெப். 6

யாழ்ப்பாணம் ஏழாலை முத்தமிழ் மன்றத்தின் பொன்விழா ஏழாலை முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தலைவர் நா. இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# உயிரியல் பாட செயலமர்வு

யாழ்ப்பாணம் ஏப்.6

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடம் கற்கும் மாணவர்களுக்கான உயிரியல் பாட செயலமர்வு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

2019 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கணித மற்றும் விஞ்ஞான பாட மாணவர்களுக்கான மறுசீரமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டம் தொடர்பான மாதிரி வினாத்தாள் அடிப்படையில் செயலமர்வு நடைபெற்றது. உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சக்திவேல் தலைமையில்நடைபெற்றசெயலமர்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்பாளர் க.செவ்வேள் கலந்து கொண்டார்.

மறுசீரமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டம் தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ( விஞ்ஞானம் ) தா.பாலசுப்பிரமணியம் எழுதிய நூல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-9)





# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் கல்லூரியின் பழைய மாணவர்கள் பொதுக்கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன. மேற்படி நிகழ்வில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரிச்சமூகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஐ)




## விவசாயின் வீட்டில் தீ நெல் மூடைகள் சேதம்

வவுனியா, ஏப். 6
வவுனியா ஓமந்தை பனிக்கர் புளியங்குளம் பகுதியில் விவசாயியின் வீடொன்றில் நேற்றுமுன்தினம் மாலை தீ விபத்து ஏற்பட்டது. இதனால் வீட்டில் அடுக்கி வைத்திருந்த 40 நெல் மூடைகள் உட்பட ஏனைய உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது என்று ஓமந்தை பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

வீட்டில் திடீரென தீ பற்றியது. இதையடுத்து அயலவர்களின் உதவியுடன் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதிலும் பயனெதுவும் ஏற்படவில்லை. 40 நெல் மூடைகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் எரிந்து நாசமாகின என்று அந்த முறைப்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஓமந்தை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

# வவு. ஓமந்தை அம்பாள் வீதி தடையை நீக்கக் கோரிக்கை

## தொடருந்துத் திணைக்களத்தின் செயல் குறித்து மக்கள் விசனம்



வவுனியா, ஏப்.6
வவுனியா, ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் அம்பாள் வீதியைத் தொடருந்துத் திணைக்களம் தடை செய்துள்ளது. அதனால் வழிபாடுகளுக்குச் செல்வதற்குத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அம்பாள் வீதியைச் சுமார் 35க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தினமும் உபயோகிக்கின்றன. அங்குள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். அதன்பின்னர் கடந்த 9 மாதங்களாக அந்தக் கடவையில் பாதுகாப்பு வேலி பொருத்தப்படவில்லை. அதனால் அந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி இறம்பைக்குளம் ஆலயத்தின் நிதி உதவியுடன் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.

எனினும்கடந்த மார்ச்மாதம் 5ஆம் திகதி மக்கள் பயன்பாட்டில் இருந்த அம்பாள் வீதிக்குத் தண்டவாளம் இட்டுத் தொடருந்துத் திணைக்களம் தடை ஏற்படுத்தியது. பாதுகாப்பு வேலியை அகற்றுமாறும் அறிவுறுத்தியிருந்தது. இந்த விடயம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, மாவட்டச் செயலரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. அந்த வீதியைத் திறக்குமாறும், பாதுகாப்புக் கடவைக்குக் காவலாளியை நியமிக்க வேண்டும் என்றும் மாவட்டச் செயலர் அறிவுறுத்தியிருந்தார். அவ்வாறு கூறப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ளபோதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. வீதிக்குப் போடப்பட்ட தடையும் நீக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதையடுத்து இந்த விடயத்தை நீதிமன்றுக்குக் கொண்டுசெல்லக் கிராம அபிவிருத்திச்சங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்தப் பாதை மூடப்பட்டுள்ளதால் அங்குள்ள விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள், நோயாளர்கள் எனப் பல தரப்பினரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அந்த வீதியை முன்னரைப் போன்று மக்களின் பாவனைக்குத் திறந்து விட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## வழக்குகள் முடிவடைந்த கஞ்சா தீ மூட்டி அழிப்பு



மன்னார், ஏப். 6
மன்னார் மேல்நீதிமன்றில் நடைபெற்று வந்த கஞ்சா தொடர்பான சில வழக்குகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில், மேற்படி வழக்குகளில் சான்று பொருள்களாக ஒப்படைக்கப்பட்ட கஞ்சா தீ மூட்டி அழிக்கப்பட்டது.

கடந்த 2017ஆம் ஆண்டுப் பகுதியில் மன்னார் மேல்நீதிமன்றில் தொடரப்பட்டிருந்த கஞ்சா தொடர்பான 6 வழக்குகள் முடிவுற்றுள்ளன. இந்த வழக்குகளில் சான்றுப் பொருள்களாக மன்னார் மேல் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்ட 80 கிலோ கஞ்சா கடந்த புதன்கிழமை மன்னார் மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லா முன்னிலையில் நீதிமன்ற அலுவலர்களால் நீதிமன்றுக்கு வெளிப்புறத்தில் எரிக்கப்பட்டது. (ம-60)

### கொக்குளாய் கடல் நீர் ஏரியில்

## சட்டவிரோத கடற்தொழில் இரு சந்தேக நபர்கள் கைது




முல்லைத்தீவு, ஏப். 6
முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் கடல்நீரேரியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

குறித்த பகுதியில் சிலர் தொடர்ச்சியாக சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்று கிடைத்தமுறைப்பாட்டை அடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. கைதானவர்கள் நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (மரி3)



## இஞ்சி அறுவடை விழா

முல்லைத்தீவு,ஏப் 6
புதுக்குடியிருப்பு விவசாய போதனாசிரியர் பிரிவில் தூவல் நீர்ப் பாசனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முன்மாதிரி இஞ்சி பயிச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது

முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தின் தொழில் நுட்ப ஆலோசனைகளுக்கமைவாக உலக உணவுத் திட்டம் மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றின் நிதியுதவியுடன் புதுக்குடியிருப்பு பெண்கள் முயற்சியாளர் சங்க பயனாளிகளால் இந்த செய்கை முன்னெடுக்கப்பட்டது.

இதனுடைய அறுவடை விழாவானது புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் நேற்றுக்காலை 8 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் அலுவலர்கள், பயனாளிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (ஜ-246)



## மாதிரிப் புத்தாண்டு நிகழ்வு

கிளிநொச்சி,ஏப் .6
கிளிநொச்சி இராமகிருஸ்ண வித்தியாலயத்தின் மாதிரிப் புத்தாண்டு நிகழ்வு அதிபர் ப.ஜோயல் பியசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கும்பம் வைத்தல், கைவிசேடம் வழங்குதல், வாழ்த்துக்கூறல், ஆசிவழங்கல், சிற்றுண்டி பரிமாறல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றன.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பங்குபற்றலுடன் சிறப்பாக நடந்தேறியது. (ஜ-222)



# மன்னார் செயலகத்தில் தீ அணைப்புப் பயிற்சி



மன்னார், ஏப். 6
தேசிய இடர் முகாமைத்துவ நிலையத்தால் தீயணைப்பு தொடர்பான பயிற்சி மன்னார் பிரதேச செயலகத்தில் உள்ள அறுபது பணியாளர்களுக்கு கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த வளவாளர்களால் மேற்படி பயிற்சிகள் வழங்கப்பட்டன. (ம)

# மாங்குளத்தில் தொடருந்துகள் தரித்துச் செல்வதற்கு ஏற்பாடு

## போக்குவரத்து அமைச்சர் இணக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்ப்பாணம் - கொழும்பு தொடருந்துச் சேவையில் ஈடுபடும் தொடருந்துகளை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரே ஒரு தொடருந்து நிலையமான மாங்குளம் தொடருந்து நிலையத்தில் நிறுத்துவதற்குப் போக்குவரத்து அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் தொடருந்துகள் தற்போது மாங்குளம் தொடருந்து நிலையத்தில் தரிப்பது இல்லை. அதனால் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தொடருந்துச் சேவைகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

மாங்குளம் தொடருந்து நிலையத்திலும் தொடருந்துகள் தரித்துச் செல்ல வேண்டும் என்று பொது மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்தக் கோரிக்கை போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அதையடுத்து அடுத்த மாதம் முதல் அனைத்துத் தொடருந்துகளும் மாங்குளம் தொடருந்து நிலையத்தில் தரித்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் உறுதியளித்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான த.சித்தார்த்தன் தெரிவித்தார். (எ-105)



## மகளிர் தன் எழுச்சி குழுமம் ஆரம்பம்

மன்னார், ஏப்.6

மன்னார், தேனுடையான் கிராமத்தில் மகளிர் தன் எழுச்சிக் குழுமம் எனும் பெண்கள் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தாயக விருட்சம் சுவிஸ் அறக்கட்டளை அமைப்பின் உதவியுடன் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

நுண் கடன்களில் இருந்து மக்களை மீட்டெடுத்தல், சேமிப்பு பழக்கங்களை உருவாக்கல், கிராமத்து பெண்களிடையே ஒரு இறுக்கமான உறவு கலந்த வலைப்பின்னலை உருவாக்கல், குழுக்களாக இணைந்து கிராம வளர்ச்சிக்கான வேலைகளில் இயங்க வைத்தல் போன்ற செயற்பாடுகளை இந்த அமைப்பு மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-222)



## பிரான்ஸ் தூதுவருடன் மன்னார் ஆயர் சந்திப்பு

மன்னார், ஏப் 6

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகைக்கும் பிரான்ஸ் நாட்டு இலங்கைக்கான தூதுவருக்குமிடையில் சிறப்புச் சந்திப்பு மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது மன்னார் மனித புதைகுழி தொடர்பாகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மன்னார் மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான உதவிகள் தொடர்பாகவும், இளையோருக்கான தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாகவும், அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து வரலாற்று சிறப்புமிக்கமடு அன்னையின் திருத்தலத்துக்கும் தூதுவர் பயணம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-56)



## மாணவர்கள் இருவருக்கு ஈருருளிகள் வழங்கிவைப்பு

வவுனியா, ஏப்.6

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் இருவருக்கு அஞ்சா உதவும் கரங்கள் அமைப்பால் ஈருருளிகள் வழங்கப்பட்டன.

புலம் பெயர்ந்து வெளிநாட்டில் வசித்துவரும் தாயக உறவுகளின் நிதிப்பங்களிப்பில் வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமார், வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோனோதாரலிங்கம் ஆகியோரால் மேற்படி ஈருருளிகள் வழங்கப்பட்டன. (ம)

## சமூக சேவை நிலையம் அமைப்பதற்கு அடிக்கல்

கிளிநொச்சி, ஏப்.6

கிளிநொச்சி, பாரதிபுரத்தில் சமூக சேவைகள் நிலையம் ஒன்றுக்குக் கடந்தவாரம் அடிக்கல் நடப்பட்டுள்ளது.

மிஸ்பா அமைப்பினரால் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் சுயதொழில் மேம்பாடு, சிறுவர்களின் மேம்பாடு என்பவற்றைக் கருத்தில்கொண்டு இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது.

கொழும்பு மிஸ்பா ஆலயத்தின் தலைமை போதகர் வண. ஜெயம் சாரங்கபாணி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் மக்கள் தொடர்பு அலுவலர் கே. செல்வேல், கரைச்சி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் இராமமூர்த்தி, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இந்த நிலையத்துக்கான அடிக்கல்லை நட்டனர். (எ-214)

### தவக்கால தியானங்கள்

## முதலில் உன்னைப்பார்

கடவுளுக்குப் பயந்து அவருடைய வழிகளில் நடக்க வேண்டிய அவசியத்தைக் குறித்து விழிப்புணர்வு ஊட்டிய அவரோ, தன்னுடைய வாழ்க்கையை அவ்விதம் வைக்க விழிப்பாய் இருக்கவில்லை.

இரண்டு பெண்கள் பதநீர் பானைகளை சுமந்தபடி சென்று கொண்டிருந்தனர். திடீரென்று ஒருத்தியின் கால் எங்கோ இடற தலையில் இருந்த பானை சாய்ந்தது. அதற்குள் மற்றவள் அது விழுந்து விடாதபடி கைகளால் தாங்கச் சென்ற போது அந்தப் பானையும் விழுந்து உடைந்தது. இவள் தலையில் இருந்த பானையும் விழுந்து உடைந்தது. மற்றவளின் பானையை விழுந்து விடாதபடி தடுக்கப்போனது நல்லதுதான் ஆனால் தன் தலையிலும் பானை இருப்பதை அவள் நினையாமல் போனதால் இரண்டு இழப்பு ஏற்பட்டது.

சில நேரங்களில் மற்றவர்கள் தவறக்கூடாது, தடம் புரளக்கூடாது, தக்த விதமாய் போய்விடக்கூடாது என்று அதிகமாக நாம் அவதானத்துடன் செயல்படுகிறோம். ஆனால் மற்றவர்கள் சரியாக இருக்கும் படி எதிர்பார்ப்போடு செயல்படுகின்ற நாம் சரியாக இருக்கிறோமா என்பதை கவனித்து செயல்பட மறந்து விடுகிறோம். உண்மை, நேர்மை, நாணயம், அன்பு, பரிசுத்தம், தாழ்மை, ஒழுக்கம் என்ற மற்றவர்கள் செவ்வையாய் இருக்கும்படி பிரசங்கிக்கும் எத்தனையோ இறைபணியாளர்கள் தங்கள் வாழ்க்கையில் அவைகளைத் தவறவிட்டு விட்ட சிறப்பற்றவர்களாய் நிற்பதைக் காண்கின்றோம். மற்றவர்கள் மனம் திரும்பவில்லையே என்று மார்பில் அடித்துக் கொள்கிற எத்தனையோ பேர் தங்களுடைய வாழ்க்கையில் உண்மையான மனமாற்றம் ஏற்பட்டதா என்று சிந்திக்காமல் இருக்கின்றனர்.

சாலமோனுடைய நீதிமொழிகள் யாரையும் சிந்திக்கத்தூண்டும் தன்மையுள்ளவை. அவை மனிதன் எப்படி நடக்க வேண்டும், அவனுடைய நடவடிக்கைகள் எவ்விதம் இருந்தால் கடவுள் அவனை ஆசீர்வதிப்பார் என்று தெளிவாக கூறுகின்றன.

ஆனால் கடவுளுக்கு பயந்து அவருடைய வழிகளில் நடக்க வேண்டிய அவசியத்தை குறித்து விழிப்புணர்வு ஊட்டிய அவரோ, தன்னுடைய வாழ்க்கையை அவ்விதம் வைக்க விழிப்பாய் இருக்கவில்லை. அவர் மதியீனத்தை குறித்து பலரை எச்சரித்து கொண்டே மதியீனமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார். கடவுளுடைய வழிகளில் நடப்பதற்கு அனேகருக்கு தூண்டுதல்கள் கொடுத்த அவரோ ஒருநாள் தேவனுடைய வழிகளை விட்டு விலகிப்போய் கடவுளால் வரும் மகிமையை இழந்து போனார். தங்களை எந்த விதத்திலும் செம்மைப்படுத்தாத பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மேல் அதிக அக்கறை கொண்டு அவர்கள் ஒழுக்காக இருக்கும்படி அதிக அவதானத்துடன் காண்பிக்கிறார்கள். ஆனால் பயனில்லை. பெற்றோர் வழியே பிள்ளைகளும் போகிறார்கள். ஆம் மற்றவர்கள் மேல் கரிசனை கொள்வது நல்லது. அதே வேளையில் எம்மைக் குறித்தும் தேவையான அளவு கரிசனை வேண்டும்.

## அனுமதியின்றி மாடுகளை கொண்டு சென்றோர் கைது

வவுனியா, ஏப்.6

வவுனியா, புளியங்குளம் இராமனூரில் அனுமதியின்றி மாடுகளை ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் கடந்த புதன்கிழமை இரவு 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளத்தில் இருந்து நுவான்வெல்ல நோக்கிப் பாரவூர்தியில் அனுமதிப் பத்திரத்துக்கு மேலதிகமாக மாடுகளை ஏற்றிச் செல்லப்பட்டுள்ளன.

பாரவூர்தியைச் சோதனை செய்த பொலிஸார், மாடுகளை மீட்டதுடன், வாகனத்தில் பயணித்தவர்களைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-222)



மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட

## 3 பெண்கள் உள்ளிட்ட பத்து பேர் புதுக்குடியிருப்பில் கைதாகினர்!

புதுக்குடியிருப்பு, ஏப். 6

நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டுவந்த பத்துப் பேர் புதுக்குடியிருப்பில் கைது செய்யப்பட்டனர். அவர்களில் மூவர் பெண்கள்.

நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகவுள்ள நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் அண்மைக்காலமாக தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கைகளை அடுத்து அவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்டனர். (ம-ரி3)

## வாழ்வாதாரத்தை உயர்த்த பண்ணை

முல்லைத்தீவு, ஏப்.6

முல்லைத்தீவு, வள்ளிபுனத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை நோக்காகக் கொண்டு கோழிப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தனி நபர் ஒருவர் இந்தப் பண்ணையை அமைத்துள்ளார். இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

6 ஆயிரம் கோழிகள், கால்நடைகள் வளர்ப்பதை நோக்காகக் கொண்டு இந்தப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், முதற்கட்டமாக 5 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி3)



# அடிப்படை வசதிகள் இன்றி சுரேஸ் வீட்டுத்திட்ட மக்கள்

முல்லைத்தீவு, ஏப்.6

புதுக்குடியிருப்பு, சுரேஸ் வீட்டுத்திட்ட மக்கள் தமக்கு அடிப்படை வசதிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று குற்றஞ் சாட்டுகின்றனர்.

அங்கு 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்கள் தமக்கான அத்தியாவசியத் தேவைகள் எவையும் வழங்கப்படவில்லை என்றும், உதவித் திட்டங்களில் தங்களை அதிகாரிகள் புறக்கணிக்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அங்கு திருமணமாகியுள்ள பல குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லை என்றும், அரசியல் காரணங்களைச் சுட்டிக்காட்டியே அவை வழங்கப்படுவதில்லை என்றும் மக்கள் கூறுகின்றனர்.

தேர்தல் முடிந்த பின்னர் தமது பகுதிக்கு அரசியல்வாதிகள் எவரும் வரவில்லை. வாழ்வாதார உதவிகள் எவையும் வழங்கப்படுவதில்லை. போரால் பாதிக்கப்பட்ட பலர் இங்குள்ளனர், முன்னாள் போராளிகள், அங்கவீனம் அடைந்தோர் எனப் பலர் உள்ளனர். அவர்கள் உரிய அடிப்படை வசதிகள் இன்றியும், வாழ்வாதாரம் இன்றியும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் வாழ்க்கையைக் கொண்டுநகர்த்துகின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

தமது கிராமத்துக்கான அத்தியாவசியத் தேவைகளை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-402)





## பன்னாட்டு கண்ணிவெடி அகற்றும் தின நிகழ்வு

கிளிநொச்சி,ஏப் .6

பன்னாட்டு கண்ணிவெடி அகற்றும் தின நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்றது

இலங்கைக்கான கண்ணிவெடி அகற்றும் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மைதானத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலர் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார்

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட கட்டளைத்தளபதி, கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் ,கரைச்சி பிரதேச செயலர், அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-214)

## ஒருதொகை கஞ்சா மீட்பு

வவுனியாவில் ஒருதொகை கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7மணியளவில் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையில் கீழ் செயற்படும் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து பூந்தோட்டம் மயானத்துக்கு அருகில் முச்சக்கரவண்டி ஒன்றினை வழிமறித்த பொலிஸார் சோதனைசெய்தனர்.

இதன்போது முச்சக்கர வண்டியைச் செலுத்தி வந்த சாரதி முச்சக்கர வண்டியை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

முச்சக்கரவண்டியை சோதனைக்குட்படுத்தியபோது 1கிலோ 265 மில்லிக்கிராம் கேரளா கஞ்சாவினை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்ற சந்தேக நபரைத் தேடி வருவதாகவும், முச்சக்கரவண்டி, கைப்பற்றப்பட்ட கஞ்சா என்பன பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான கூட்டம் மன்னாரில்

மன்னார், ஏப்.6

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீடித்த தீர்வுகள் மீதான தேசிய கொள்கைகள் பற்றிய சிறப்புக் கலந்துரையாடல் நேற்று மன்னார் மாவட்டச்செயலகத்தில் மாவட்டச்செயலர் சி.ஏ.மேகன்றாஸ் தலைமையில் நடைபெற்றது.

இடம்பெயர்ந்தோருக்கான கொள்கைகள் எதுவும் முன்னைய காலங்களில் வகுக்கப்பட்டிருக்கவில்லை. போரால் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கான நீடித்த தீர்வுகள் மீதான தேசிய கொள்கைகள் பற்றிய போரால் உள்நாடு வெளிநாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களது வீடுகள் அல்லது இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்குத் திரும்பியுள்ள நிலையில் அவர்களில் பலருக்கு நீடித்து நிலைக்கும் தீர்வு கிடைக்கவில்லை.

இடம்பெயர்ந்தவர்கள் மனித நேயத்தையும் மனித உரிமைகளையும் பேணுதல் பொருட்டு இடம்பெயர்ந்தவர்கள் அவர்கள் குடியிருந்த இடத்துக்கே செல்லுதல், பாதுகாப்பு இழப்புக்கள் மற்றும் சிரமங்களுக்கான பண ரீதியான நட்ட ஈடுகள் வளங்கள் காணி மற்றும் சொத்துக்களை மீட்டுக்கொடுத்தல் மருத்துவம் மற்றும் உள சமூக உதவிகளை வளங்கல், சமூக உட்கட்டமைப்பை மீளவும் கட்டி எழுப்புதல் நினைவுச் சின்னங்கள் அல்லது அரச அறிக்கைகள் ஊடாக இழப்புக்கள்மற்றும்சிரமங்களை அங்கீகரித்தல் போன்ற தகவல்கள் அடங்கிய அரச அலுவலர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது. மன்னார் மாவட்ட செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வளவாளர் என்.புகேந்திரன், மன்னார் மாவட்டச்செயலர் சி.ஏ.குணபாலன், நானாட்டான் மன்னார் மடு முசலி மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி அலுவலர்கள் கிராம சேவையாளர்கள், நிர்வாக அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் இருநுறுக்கும் அதிமான பணியாளர்களும் கலந்து கொண்டார்கள். (எ-213)

## மழலைகள் மகிழ்களம்

மீசாலை கிழக்கு நாவலர் முன்பள்ளியின் மழலைகள் மகிழ்களம் முன்பள்ளியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது.

நாவலர் முன்பள்ளி அபிவிருத்தி குழுச் செயலர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம்,கொடிகாமம் நிதுர்சிகா நகைமாட உரிமையாளர் ச.ரஜினிகாந் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விளையாட்டில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான பரிசில்களை விருந்தினர்கள் வழங்கி வைத்தனர். (ஐ-159)



## சிறப்புத் தேவையுடையோருக்கு சக்கர நாற்காலிகள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஏப்.6

முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் வசிக்கும் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட நிலையில் சுயமாக நடமாடமுடியாத நிலையில் உள்ள சிறப்புத் தேவையுடையவர்கள் 9 பேருக்கு சுகாதார மேம்பாட்டு நிறுவனத்தால் சக்கர நாற்காலிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு சுகர்தார மேம்பாட்டு நிறுவன திட்டஇணைப்பாளர் சி.சிவதர்சன் மற்றும் வவுனியா பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி அலுவலர் சி.சுபாஷினி ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைக்கு அமைவாகவே மேற்படி சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலக உதவி பிரதேச செயலர், அபிவிருத்தி அலுவலர், முல்லைத்தீவு நீர் வழங்கல் திட்டத்தின் திட்ட இயந்திரவியலாளர் மற்றும் இயந்திரவியல் உதவியாளர், முல்லைத்தீவு சுகாதார மேம்பாட்டு நிறுவன திட்டஇணைப்பாளர், ஒட்டுசுட்டான் வைத்தியசாலை வைத்தியர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (மு-110)





## சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு கொமர்சல் வங்கியின் பரிசுத்திட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 6

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு 'வெளிநாட்டில் இருந்து பணப் பரிமாற்றத்தை மேற்கொள்வோருக்கான சுபீட்சமான எதிர்காலத்தை முன்னிட்டு' என்னும் பரிசுத் திட்டம் கொமர்சல் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கிளையில் முகாமையாளர் ஏ.ஜெயபாலன் தலைமையில் நேற்றையதினம் நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி வரையில் நாட்டில் உள்ள சகல கொமர்சல் வங்கிகளின் ஊடாகவும் இடம்பெறும் வெளிநாட்டு பண பரிமாற்றத்தை மேற்கொள்ளும் சகலருக்கும் பரிசில்கள் வழங்குவதோடு அவர்கள் அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில் உள்வாங்கப்படுவார்கள் எனவும் இதற்காக எதிர்வரும் 12ஆம் திகதி வரை சகல கிளைகளும் பணி நாள்களில் மாலை 6 மணிவரையிலும் விடுமுறை தினங்களில் பகல் ஒரு மணி வரையும் திறந்திருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-105)

# ஐ.நா.ம.உ சபை குரைக்கும் நாயே கடிக்கும் நாயல்ல

## உதய கம்மன்பில கூறுகிறார்



கொழும்பு, ஏப். 6

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை குரைக்கும் நாயே தவிர கடிக்கும் நாயல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எனவே பன்னாட்டு நீதிமன்றத்தை அமையுங்கள் என்று வலியுறுத்துவதைக் கண்டு அரசும் அஞ்சவேண்டிய தேவையில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வரவு -செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் தரப்பின் அச்சுறுத்தலைக் கண்டும் அஞ்சிவிட வேண்டாம். பன்னாட்டு நீதிமன்றத்தை அமைக்கக்கோரும் தமிழர் தரப்பின் கோரிக்கை இறுதி வரை கனவாகவே அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த)

## 119 தமிழ் இளைஞர்கள் கொலை:

## ஓ.எம்.பியின் பணியகத்தில் சிறிதரன் எம்.பி. சாட்சியம்



யாழ். ஏப். 6

யாழ்ப்பாணம் மண்டைதீவில் அமைந்துள்ளது எனக் கருதப்படும் மனிதப்புதைகுழிகள் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்றுமுன்தினம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தில் சாட்சியம் பதிவு செய்தார்.

கொழும்பிலுள்ள காணாமல்போனோருக்கான அலுவலகத்தில் அதன் தலைவர் சாலிய பீரிஸ் முன்னிலையில் நேற்றுமுன்தினம் சாட்சியம் பதிவு செய்தார்.

மண்டைதீவில் அமைந்துள்ள புனித தோமையார் தேவாலயத்துக்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள காணியில் அமைந்துள்ள கிணறு, செம்பாட்டுத் தோட்டத்திலுள்ள கிணறு, கடற்படை முகாமுக்குள் உள்ள கிணறு ஆகியவற்றில் மனித எலும்புக்கூடுகள் உள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.

1990ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் இருந்து முன்னேறிய இராணுவத்தினர், அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகள் உள்ளிட்ட இடைப்பட்ட பகுதி இளைஞர்களை மனிதக் கேடயமாக நகர்த்தி மண்டைதீவுக்கு வந்தனர் எனவும், அங்கு 119 இளைஞர்களைச் சுட்டுக் கொன்று, கிணறுகளில் போட்டு மூடினார் எனவும் அந்தக் கிராம மக்கள் குறிப்பிடுகின்றார்கள்.

2002ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையின் பின்னர் வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் செயலகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர்கள் மற்றும் சில மனித உரிமை அமைப்புகள் இணைந்து இந்தப் படுகொலை தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு, ஆவணமொன்றை வெளியிட்டுள்ளனர். அதில் கொல்லப்பட்ட 119 இளைஞர்களின் பெயர் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளின் காலத்தில் வெளியிடப்பட்ட அந்த ஆவணமே, மண்டைதீவு படுகொலை குறித்த ஆய்வு ரீதியான ஆவணமாகக் கருதப்படுகின்றது. அந்த ஆவணத்தையும் சி.சிறிதரன் அலுவலகத்தில் கையளித்தார்.

இது குறித்து தொடர்ந்து ஆராய்ந்து, அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் அண்மையில் சிறிதரன் உரையாற்றியபோது, காணாமல்போனோர் அலுவலகத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் மனோ கணேசன் பதிலளித்திருந்தார். அந்தக் கிணறுகள் குறித்த தகவல்கள் மற்றும் வரைபடங்களைத் தந்தால் தோண்டிப் பார்க்கவும் தயாராக இருப்பதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

(த-22)

## ஜெனிவாவின் அக்கறையை மாகாணத்தில் காட்டுங்கள்

### கூட்டமைப்பிடம் வரதராஜப்பெருமாள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 6

தமிழ் அரசியல்வாதிகள் ஜெனிவாத் தீர்மானத்தில் மட்டும் அக்கறை காட்டுவதால் தமிழர்களுக்கு என்று கிடைத்த மாகாண சபையை வலுப்படுத்த, அதற்கான தேர்தலைக் காலம் தாழ்த்தாது செயற்படுத்த எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை. இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள்குற்றம்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம், இன அழிப்புத் தொடர்பில் தமிழ் மக்கள் ஜெனிவாவில் நீதி கோரியிருந்தனர். ஜெனிவாச் சமர் காரசாரம் குறைந்து எம்மைக் கைவிட்டதாகிவிட்டது. ஜெனிவா ஊடாக பெறப்பட்ட விடயம் என்னவெனில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பணியகம் ஒன்று அமைக்கப்பட்டமையே. அது கூட முழுமையாக மக்களுக்குப் பயன் கிடைக்கவில்லை.

அதற்கு அப்பால் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு புதிதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைபு கொண்டு வரப்படவுள்ளது. கொண்டு வரப்படும் சட்டம் முன்னர் இருந்த சட்டத்தைவிட மிக மோசமானது. அதில் அடிப்படை ஜனநாயக உரிமைகளையே முடக்குவதாக அமைந்துள்ளது. எனினும் இந்தச் சட்ட வரைவை மேலைத்தேச நாடுகள் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. அவ்வாறான நாடுகளில் இதே அமைப்பான சட்டம் இருப்பதாலேயே பன்னாடுகள் இதில் அதிக அக்கறை காட்டவில்லை. அரசியல் தீர்வு என்று கூறிக் கொண்டு இருக்கும் தமிழ் அரசியல் தலைமைகள் மாகாண சபையை வலுப்படுத்த அதிகம் அக்கறை செலுத்தவில்லை. மாகாண சபையின் ஆயுட்காலம் நிறைவடைந்தும் இன்றுவரை தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்கவில் லை.

வரவு- செலவுத்திட்டத்தில் முற்போக்கான திட்டங்கள் எவையும் இல்லை. இது முழுக்க முழுக்க தேர்தலை இலக்காகவைத்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தமுறை சமர்ப்பிக்கபட்டுள்ள வரவு- செலவுத் திட்டத்தில் கடன் சுமையே அதிகரிக்கும் நிலமை உள்ளது.

கிராம எழுச்சித் திட்டம் என்ற பெயரில் அரச தரப்பும் அவர்களுக்கு முண்டு கொடுப்பவர்களுக்கும் அதிகளவான நிதிகள் வழங்கப்படுகின்றன. இது முழுக்க தேர்தலை இலக்கு வைத்தே. இதனை மறைமுக இலஞ்சம் என்றும் கூறலாம். இதனை இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் தேர்தல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்துகின்றனர் - என்றார். (த)

## கணக்காளர் ஆளணி வரும்வரை செயலகத்துக்கு நியமனமில்லை

யாழ்ப்பாணம், ஏப். 6

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்துக்கு கணக்காளருக்கான ஆளணி அங்கீகாரம் வழங்கப்படும் வரையில் முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகத்தில் உள்ள கணக்காளரும் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவார் என்று நேற்றைய வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டது.

கல்முனை பகுதியில் உள்ள வடக்கு , தெற்கு ஆகிய பிரதேச செயலகங்களில் நிதி அனுமதி ஆளுகை தொடர்பில் ஏற்படும் முரண்பாட்டைப் போக்கும் வகையில் தமிழர் பகுதிக்கான கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு தனியான கணக்காளர் நியமிக்கப்பட்டு நிதி அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்று தலைமை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற வடக்கு -கிழக்கு அபிவிருத்திக் குழுவில் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தில் தற்போது கணக்காளர் இன்மையே நிதி அங்கீகாரம் இன்மைக்கு முக்கிய காரணம். அதனால் கணக்காளரை நியமிக்க வேண்டும். கணக்காளருக்கான ஆளணி அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். அதனை நிறைவேற்றும் வரையில் முஸ்லிம் பிரிவு பிரதேச செயலகத்தில் தற்போது உள்ள கணக்காளரும் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-105)

## திட்டமிட்ட செயற்பாடுகளால் தற்போது சாதகமான பலன்கள்

### தலைமை அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6

மாநகரம், வீடமைப்பு மற்றும் வர்த்தக வலயம் தொடர்பில் சரியான தீர்மானங்களை மேற்கொண்டு முறையான திட்டங்களின் அடிப்படையில் நாம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தி ருந்தோம். அதன் பிரதிபலன்களை எம்மால் காட்ட இயலுமாக இருந்தது.

எனினும் அந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு என்ன நடந்திருக்கின்றது? அந்த நிறுவனங்கள் உரிய திட்டமிடலின் கீழ் பணிபுரிந்து பிரதிபலன்களை வெளிக்காட்டி உள்ளதா?

இவ்வாறு கேள்வியெழுப்பினார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

ஹோமாகம நகரப் பூங்கா திறப்பு, தொழில்நுட்ப நகருக்கான நுழைவாயிலுக்கான அடிக்கல் நடுகை மற்றும் மகரகம நான்கு மாடிகளைக் கொண்ட வாகனத் தரிப்பிடத்தை திறந்து வைத்தல் ஆகிய நிகழ்வுகளின் பின்னர் மகரகம நகர சபைக்கு முன்னால் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போக்குவரத்துத் துறையை விருத்தி செய்வதற்காக நாம் புதிய வீதிக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி வருகின்றோம்.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சிந்தனைக்கமைய நடுத்தர வர்க்கத்தினருக்கு நவீனமயமான வாழ்க்கை முறையொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கண்டி, குருநாகல், கம்பஹா போன்ற அனைத்து நகரங்களிலும் அபிவிருத்தி பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் இதுவரை என்ன செய்திருக்கின்றது?, எவ்வித பிரதிபலன்களையும் வெளிக்காட்டவில்லை என குற்றம் சுமத்தி எதிர்கட்சியினர் 2018ஆம் ஆண்டு பல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அவ்வாறு குற்றம் சுமத்தி ஒரு வருடம் பூர்த்தியாகின்ற நிலையில் நாங்கள் அனைத்து பிரிவுகளிலும் பிரதிபலன்களை காட்டுவதற்கு ஆரம்பித்துள்ளோம் என்று ரணில் தெரிவித்தார் என்று ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



## பின் வழியாக சபைக்குச்சென்ற அரசதலைவர்

கொழும்பு, ஏப்.6
அரசதலைவர் மைத்திரி பால சிறிசேன நாடாளு மன்றத்துக்குள் நேற்று பின்கதவு வழியாக நுழைய வேண்டிய நிலை ஏற்பட்டது.
கொழும்பில் நேற்று பல்க லைக்கழக மாணவர்கள் நாடாளுமன்றத்தை நோக்கி பேரணி நடத்தி னர்.
இதனால், நாடாளுமன்றச் சுற்றுவட்ட வீதி பொலிஸா ரால் மூடப்பட்டது.
இதனால், நாடாளுமன்றத் துக்குச் செல்லும் அரசத லைவரின் வாகன அணி யின் பாதை மாற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

# ஊர்வலத்தைத் தடுக்க பெண் பொலிஸ் அரண்

## தொடரும் உத்தி

கொழும்பு, ஏப். 6
அரசதலைவர் செயலகம் வரை செல்ல முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்களை பெண் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், அரச பொறியிய லாளர்கள் சங்கத்தினர் இணைந்து நேற்றுமுன்தி னம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.
புறக்கோட்டை தொடருந்து நிலையத்திலிருந்து, அரசத லைவர் செயலகம் வரை செல்ல முயன்ற ஆர்ப்பாட்டக் காரர்களை வீதித்தடைகளை ஏற்படுத்தி, பெண் பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.



கலைந்து சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. வீதி தடை களை ஏற்படுத்தி, ஆர்ப்பாட் டக்காரர்களை பெண் பொலி ஸார் தடுத்து நிறுத்தியமை குறித்த ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைர லாகி வருகின்றன. (கு)
இதனையடுத்து, ஆர்ப்பாட் டக்காரர்கள் அங்கிருந்து



## ‘ஸ்மார்ட்’ யுகம் நோக்கி மாணவர் முன்னேற்றம்

### தலைமை அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஏப்.6
தொழில்நுட்பம் மற்றும் அறிவுடன் கூடிய நாடுகளே தற்போது உலகில் முன்ன ணியில் உள்ளன. அதே போன்று எமது மாணவர்க ளும் தொழில்நுட்பத்துடன் ஸ்மார்ட் யுகத்துக்குப் பிர வேசித்துள்ளனர். இன் னும் பத்து வருடங்களின் பின்னர் இந்த நிலமை இன் னும் மாற்றம் அடையும் என்று தலைமை அமைச் சர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.
மிலாகிரிய புனித பால்ஸ் மகளிர் கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.
அவர் மேலும் தெரிவித்ததா வது:
நனோ தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மருத்துவ தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறை களில் தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது.
தொழில்நுட்பம் மற்றும் அறிவுடன் முன்நோக்கி செல்வதற்கு எமது மாண வர்களுக்கு விரிவான வாய்ப்பை வழங்க வேண் டும். தற்போது பாடசாலைக ளில் உயர்தரத்துக்கு அறி முகப்படுத்தப்பட்டுள்ள தொழில் பாடத்துறைகள் இதற்குப் பெரும் உந்து சக் தியாக அமையும் என்றார்.
கல்வி அமைச்சர் அகிலவி ராஜ் காரியவசமும் நிகழ் வில் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது
உயர்தர வகுப்புக்குப் போன்று எதிர்காலத்தில் ஏனைய வகுப்புகளுக்கும் ரப் கணினி வழங்க நடவ டிக்கை எடுப்போம். தொழில் நுட்பத்துடன் உலகம் ஒவ் வொரு நாளும் மாற்றம் அடைந்து வருகின்றது.
தற்போது வயது வந்தோர் புரியும் தொழில்களை பார்க்கிலும் தற்போதைய சிறுவர்கள் புரியவுள்ள தொழில் முற்றிலும் மாற்ற மானது. எனவே அந்த நில மைக்கு முகங்கொடுக்க கூடியவர்களாக எமது சிறு வர்களை நாம் மாற்ற வேண்டும்.
புத்தகப் பைக்குப் பதிலாக மாணவர்கள் ரப் கணினியு டன் பாடசாலைக்கு வருவ தற்கு எதிர்வரும் காலங்க ளில் நடவடிக்கை எடுக்கப்ப டும். மேலதிக வாசிப்பு நூல், ஈ கற்றல், ஈ வகுப்பு உள்ளிட்ட வசதிகள் அதன் ஊடாகப் பெற்றுக்கொடுக் கப்படும்.
நாட்டின் பாடசாலைக் கட்ட மைப்பைக் கட்டியெழுப்புவ தற்கான திறமைகள் கொண்ட அதிபர்கள் கட்ட மைப்பில் இருக்க வேண் டும். எனினும் முன்னைய காலங்களில் அதிபர்களை இணைத்துக்கொள்ளும் முறைமைக்குப் பதிலாக நியாயமான முறையில் நியமனம் வழங்கும் முறை மையைக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார்.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த நிகழ் வுக்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், மின்வலு மற்றும் மீள் புதுப் பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரவிகருணாநாயக்க உட்பட பலரும் கலந்து கொண்ட னர் என்று கல்வி அமைச்சு தெரிவித்தது. (கு)



## சுரக்ஷா காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒப்பந்தம்

கொழும்பு, ஏப். 6
சுரக்ஷா காப்புறுதித் திட் டத்தை இந்த வருடம் நடை முறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் கல்வி அமைச் சில் கடந்த புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டது.
கல்வி அமைச்சு சார்பாக கல்வி அமைச்சின் செயலர் நிஹால் ரணசிங்க அலி யான்ஸ் காப்புறுதி நிறுவ னத்தின் சார்பாக அதன் முகாமைத்துவப் பணிப்பா ளர் சுரோகா அலஸ் ஒப்பந்த தில் கைச்சாத்திட்டனர்.
2018 டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரை சுரக்ஷா காப்புறுதி யைச் செலுத்துவதற்கு காப் புறுதி நிறுவனம் ஒப்பந்த தின் ஊடாக இணக்கம் தெரிவித்துள்ளது.
சுரக்ஷா காப்புறுதி சுகாதார காப்புறுதி, அவசர விபத்துக் காப்புறுதி, வாழ்க்கைக் காப் புறுதி என மூன்று பிரிவு களின் ஊடாக நடைமு றைப்படுத்தப்படவுள்ளன.
சுகாதார காப்புறுதியின் ஊடாக தனியார் அல்லது அரச மருத்துவமனைக ளில் சிகிச்சை பெறுவதற்கு 2லட்சம் ரூபாவும், வெளி வாரியாக சிகிச்சை பெறுவ தற்கு 2 லட்சம் ரூபாவும், குணப்படுத்த முடியாத நோய்க்காக 2 லட்சம் ரூபா தொடக்கம் தேவைக்கேற்ப வகையில் பணம் பெற முடி யும். (அரச வைத்தியசா லைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்கு நாள் ஒன் றுக்கு 3 ஆயிரம் ரூபா கிடைக்கும்). அவசர விபத் துக் காப்புறுதியின் கீழ் முழு மையான செயலிழப்புக ளுக்கு 2 லட்சம் ரூபாவும், அரைவாசி செயலிழப்புக ளுக்கு ஒன்றரை லட்சம் தொடக்கம் 2 லட்சம் ரூபா வரை பெற முடியும்.
வாழ்க்கைக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் இயற்கை அல்லது அவசர விபத்து க்கள் ஆகிய இரண்டும் குறித்த திட்டத்தில் உள்ள டங்கும். பெற்றோர் உயிரி ழப்பின் போது ஒருவருக்கு 2 லட்சம் ரூபாவும் மாண வர் உயிரிழக்கும் பட்சத்தில் ஒன்றரை லட்சம் ரூபாவும் கிடைக்கும். குடும்பத்தில் பாடசாலைக்குச் செல்லும் அனைத்துப் பிள்ளைகளுக் கும் பெற்றோர் உயிரிழக் கும் போது குறித்த சலுகை கிடைக்கும்.
அரச பாடசாலை மாணவர் களுக்கும் தனியார் பாட சாலை மாணவர்களுக்கும் பன்னாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கும் பிரிவெ னாவில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் அவ ரது சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சுரக்ஷா காப்புறுதி வழங்கப்படவுள் ளது. இதன்படி10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான காப்புறுதி தொகை 45 இலட்சம் மாணவர்களுக் கும் கிடைக்கும். 2017 ஒக் டோபர் முதலாம் திகதி தொடக்கம் சுரக்ஷா காப்புறு தித் திட்டம் நடைமுறைப்ப டுத்தப்பட்டு வருகின்றது. (கு)

## அப்பாவி மக்களின் கடன்களை அரசு ரத்துச் செய்யவேண்டும்

### மகிந்த ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, ஏப். 6
அப்பாவி மக்கள் பெற்றுக் கொண்ட நுண்கடன்களை இரத்துச்செய்ய அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலை வர் மகிந்த ராஜபக்ச வலியு றுத்தியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் நிலை யியற் கட்டளை, 27 இன் கீழ் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.
கிராம மக்களின் அவசர தேவைக்காகவே, நுண்க டன் திட்டம் அறிமுகப்படுத் தப்பட்டது. கடனைப் பெற் றுக்கொள்ள நம்பிக்கை மட்டுமன்றி, அப்பாவி மக்க ளின் சொத்துக்களும் அட மானம் செய்யப்பட்டன.
மீனவர்கள் தங்களது மீன் பிடி உபகரணங்களையும், ட் பெண்கள் தையல் இயந் திரத்தையும், விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரம் என அனைத்தையும் அடகு வைக்க வேண்டிய நிலை மை ஏற்பட்டது.
இவ்வாறு பல சிக்கல்க ளுக்கு மத்தியில் பெற்றுக் கொண்ட இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையும் பயனாளிக ளுக்கு ஏற்பட்டது.
இதுதொடர்பாக அரசு இது வரை எந்தவித நடவடிக் கையும் மேற்கொள்ள வில்லை. நுண்கடனைப் பெற்றுக்கொண்டவர்களுக் கான கடன் இரத்து செய்யப் படும் என்று அரசு கூறியுள்ள போதும், இதுவரை அந்த நடவடிக்கை முன்னெடுக் கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.
இந்த விடயத்தில் இன் னொரு பிரச்சினையும் ஏற் பட்டுள்ளது. அதாவது, கட னில் வட்டி வீதம் அதிகரித் துள்ளதோடு, பயனாளிகள் மிரட்டப்படுகின்றமையும், பல்வேறு வழிகளில் லஞ் சம் கொடுக்க நேரிடுகின்ற மையும் இந்த விடயத்தின் விளைவாகக் காணப்படு கின்றது. (கு)

## மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க அதிகம் செய்யவேண்டியுள்ளன

### நோர்வே அயலுறவு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6
இலங்கையில் ஏற்பட்டுள்ள முன் னேற்றங்களை ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக் கான நல்லிணக்கச்செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் இன்னும் அதி கம் செய்ய வேண்டியுள்ளது என்று நோர்வே அயலுறவு இராஜாங்க அமைச்சர் மாரியன் ஹகென் தெரிவித் துள்ளார்.
அண்மையில் கொழும்புக்கு வந்தி ருந்த அவர், கொழும்பு ஆங்கில நாளி தழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி யில் இவ்வாறு தெரிவித்தார்.
இலங்கையின் நல்லிணக்கச் செயல் முறைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக, நோர்வே மிக உன்னிப் பாகக் கவனித்து வருகிறது. நாங்கள் அதில் ஆர்வமாக இருக்கிறோம். காணாமல் போனோருக்கான பணி யகத்துக்கு நான் சென்றிருந்தேன். அது முக்கியமான பணியை மேற் கொள்கிறது.
மோதல்கள் நிகழ்ந்த உலகின் ஏனைய நாடுகளைப் பார்த்தால், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிலை குடும்பத்தி னருக்கு வழங்குவது, காயங்களைக் குணப்படுத்துவதற்கு முக்கியமா னதாக இருந்துள்ளது.
காணாமல் போனோருக்கான பணி யகம் முன்னோக்கிய ஒரு படி. அது முக்கியமான பணியைச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. (கு)



## கடையும் வீடும் தீயில் நாசம்

கொழும்பு, ஏப். 6
கந்தப்பளை நகரில் இறைச்சிக்கடை யும் ஒரு குடியிருப்பும் எரிந்து நாசமாகி யுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
நேற்றுமுன்தினம் இது இடம்பெற் றுள்ளது.
பொலிஸார், பொதுமக்கள், நுவரெலியா பிரதேசசபையினர் இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.
தீப்பற்றியமைக்கான காரணம் கண்டறியப் படவில்லை. (கு)

## உதயன் ஊடக அனுசரணையுடன்

# பன்னாட்டு தமிழ் இதழியல் மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.6

நான்காவது பன்னாட்டுத் தமிழ் இதழியல் மாநாடு யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை ஆரம்பமானது. மக்கள் இதழியல் அமைப்பு, சென்னை பல்கலைக் கழக தொடர்பியல் துறை ஆகியவற்றின் ஏற்பாட்டில் "உதயன்" நாளேட்டின் அனுசரணையுடன் இந்த மாநாடு நடத்தப்படுகின்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.



நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்ததாவது:

தமிழ் பத்திரிகை வரலாற்றில் தமிழ் நாட்டிலே அன்று வி.கல்யாண சுந்தரம் பிள்ளை இருந்தார்கள். அவர் சுதேசியம் போன்ற பத்திரிகைகளில் ஆசிரியர் தலையங்கங்கள் மற்றும் கட்டுரைகளை எழுதினார். அவர் அவ்வாறு எழுதுவது நாடக தமிழ் போல இருக்கிறது என்ற விமர்சனங்கள் அப்போது எழுந்தன. யாழ்ப்பாணத்தில் எனது குரு தந்த வழியிலே தான் எனது எழுத்துக்கள் அமையும் என்று தெரிவித்தார். இவ்வாறு தமிழ் நாட்டில் பத்திரிகைத் துறையில் இருந்தவர்கள் எல்லாம் யாழ்ப்பாணத்தின் துறை சார்ந்த ஆசிரியர்களை புகழ்வார்கள். அந்தப் பெருமைமிக்க யாழ்ப்பாணத்தில் இந்தகைய மாநாடு நடைபெறுவது பாராட்டுக்கு உரியது - என்றார்.



நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்ததாவது:

நாளைய தினத்தில் நாம் இதைவிட நன்மையாக வாழ்வது எப்படி? இதுவே ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மனித சமுதாயமும் தனியாகவும் குழுவாகவும் கேட்கவேண்டிய ஒரே ஒரு கேள்வி. நான் ஊடகத்துக்கு கௌரவமாக பயப்படுபவன். அதனால் மக்கள் சார்பில் அவர்களுக்கு பதில் சொல்ல தேவை உடையவனாகவும் இருக்கிறேன்.

தமிழ் என்பது வெறும் மொழியல்ல. தமிழர்கள் உலக நாகரிகத்துக்கு வரை விலக்கணம் கொடுத்தவர்கள். பெண்ணைத் தாயாக மதிக்கும் தன்மை கொண்டவர்கள். முதல் நாள் என்னைப் பற்றி நல்ல விதமாகவும் மறுநாள் பத்திரிகையில் இன்னொரு விதமாகவும் செய்திகள் வரும். அது பத்திரிகை ஆசிரியரின் சமூகப் பொறுப்பு. இங்கு ஊடகத்துக்கான திடமான அங்கீகாரம் - ஒரு நிலை காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கான நடவடிக்கையை நான் அரசுடன் கதைத்து பெற்றுத் தருவேன். நானும் ஆரம்பத்தில் ஊடகத்தில் பணியாற்றியவன் என்ற வகையில் எனக்கும் அதன் தார்ப்பரியங்களைப் புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது - என்றார்.

இந்தியாவின் புதுடில்லியைச் சேர்ந்த பேராசிரியர் விஸ்வஜித்தாஸ் நிகழ்வில் உரையாற்றிய போது:

மக்களுக்கும் ஊடகத்துக்கும் அரசுக்கும் இடையே தெற்காசியாவில் எவ்வாறான உறவுகள் அல்லது நிலைகள் காணப்படுகின்றன என்பது தொடர்பில் நாம் பார்க்க வேண்டும். அரசு, அரசமைப்பு, ஜனநாயகம் சார்பான தொடர்புகள் கடந்த காலத்தில் பொருளாதார தாராண்மிய வாதத்தால் கட்டமைக்கப்பட்டன. அது போன்று தெற்காசியாவில் உள்ள பண்பாடுகளை ஊடகங்கள் மறைத்து விட்டன. மக்களின் பாரம்பரியங்களை ஊடகங்கள் மற்றும் அரசு என்பன கண்டு கொள்ளவே இல்லை. இதுதான் மைய உரையின் மிக பிரதானமான விடயமாக அமைகிறது.

அரசியல் மயமாக்கப்பட்ட ஊடக மயமாக்கலாக இப்போது இருக்கின்றனவா என்று தான் பார்க்க வேண்டும். நாம் நல்ல நோக்கத்துக்காக அவற்றை பயன் படுத்த வேண்டும். ஆனால் அவை அவ்வாறு தெற்காசியாவில் செயற்படுவதாக தெரியவில்லை - என்றார்.

சென்னை பல்கலைக் கழகத்தின் ஊடகத் துறை மற்றும் தொடர்பியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் கோபாலன் ரவீந்திரன் நிகழ்வில் உரையாற்றினார்.





அவர் தெரிவித்ததாவது:

2009 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த மாநாட்டு பறை கலைப் பயணம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து இன்று அது நாட்டு புறங்களில் எமது கலையை பரப்பும் விடயமாக மாறிவிட்டது. மக்கள் மத்தியில் இணைப்பாக இந்த கலையும் ஊடகமும் காணப்படுகிறன. இன்றைய நிலை மக்களின் தேவைகளை தொடர்பியல் தளங்களில் எவ்வாறு ஏற்றுவது என்பது தான். இந்தியாவில் ஊடகங்களுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி கடந்த பத்து வருடங்களாக நிலவி வருகிறது. அதற்கு காரணம் உலக மயமாக்கல், வணிக மயமாக்கல். தாராள மயமாக்கல் ஆகும். இன்று தமிழக ஊடகங்களில் மக்கள் இல்லை. மக்கள் சார்பான பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்தும் போது ஆய்வாளர்கள் தரும் இறுதி தகவல் ஒன்றுக்கும் குறைவான நிலையில் தான் செய்தி தாள்களில் மக்கள் இருக்கிறார்கள். தொண்ணுற்று ஒன்பது சதவீதம் யார் இருக்கிறார்கள் என்பது எமக்கு தெரியும். அரசியல் வாதிகள், சினிமாக்காரர்கள், காப்ரேட் நிறுவனங்கள். யார் மக்கள் என்பது தெரியாமல் போனதுக்கு அவர்கள் மட்டும் காரணம் இல்லை. எமது ஊடகவியாளர்கள் பணியாற்றும் போது அவர்களின் முதலாளியின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு தான் வேலை செய்ய வேண்டும். ஆகவே மக்களுக்கான ஒரு தளமாக ஊடகம் அமைய வேண்டும் - என்றார்.

மாநாட்டின் இறுதி அமர்வுகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

(எ-7)



# இதழியல் டிப்ளோமாதாரிகளுக்கு நியமனங்கள் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இதழியல் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு அரச வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று வடக்கு ஆளுநர் சுரேன் ராகவனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நான்காவது பன்னாட்டு இதழியல் மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநரிடம் இது தொடர்பான மனுவை இதழியல் டிப்ளோமா மாணவர்கள் கையளித்தனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட உடற்கல்வி டிப்ளோமா மற்றும் மீன்பிடிக் கற்கைகள் டிப்ளோமாதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இதழியல் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு அரச நியமனம் வழங்க வேண்டும் என்று பல இடங்களில் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும், நியமனங்கள் வழங்கப்படவில்லை.

பாடசாலை ஊடகக் கற்கைகள் ஆசிரியர்கள், மக்கள் தொடர்பாடல் அலுவலர்கள், அமைச்சுக்களின் மற்றும் திணைக்கள ஊடக அலுவலர்கள், பல்லூடக தொழில்நுட்ப அலுவலர்கள், ஆவணவாக்கல் உத்தியோகத்தர்கள் போன்ற அரச பதவிகளுக்கு இதழியல் டிப்ளோமா தாரிகளை உள்வாங்க வேண்டும் என்று அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ)

# தேசிய ஒற்றுமை முழுமையாக நிலைமாற்று நீதி மிக அவசியம்

## தேசிய சமாதானப் பேரவை தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 6

தேசிய ஒற்றுமை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் நிலைமாற்று நீதியை நடைமுறைப்படுத்த வேண்டும். ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைக்கும் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பது அவசியம். தேசிய ஒற்றுமையை நிலைநாட்டுவதற்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் நிலைநாட்டத் தயாராகவுள்ளோம்.

இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பேரவை ஏற்பாடு செய்த இளைஞர்களுக்கான போட்டி நிகழ்வின் இறுதி நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றிய பெரேரா மேலும் தெரிவித்ததாவது:

நிலைமாற்று நீதியியை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஊக்குவிப்பு இளைஞர் சமூகத்துக்குப் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். நிலைமாற்று நீதியை நடைமுறைப்படுத்துவதில் அநேகமான இளைஞர்கள் முக்கிய கவனம் செலுத்தியே வருகின்றனர்.

தேசிய சமாதானப் பேரவையும் இதற்கான பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. புதிய வேலைத்திட்டங்களையும் தேசிய மட்டத்தில் ஆரம்பித்துள்ளோம். இந்த முயற்சிகளை இடைநடுவே கைவிடப்போவதில்லை. சமூக ஒன்றிணைவுக்காக நடத்தப்படும் வேலைத்திட்டங்களுக்கு இளைஞர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கின்றோம்.

வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள சமூகத்தை ஒன்றிணைந்த சமூகமாக மாற்றியமைக்க வேண்டும். அதற்காகவே நிலைமாற்று நீதி முக்கியம் பெறுகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு வழங்கியுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளையும் முன்னெடுக்க வேண்டும். அரசியல்வாதிகளும் இவ்வாறான சமூக ஒன்றிணைவு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

ஒற்றுமையான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கென முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுக்கும் பொறுப்பு தேசிய சமாதானப் பேரவைக்கு உள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்த அனைத்துவிதமான முயற்சிகளையும் முன்னெடுக்க எமது அமைப்பு தயாராகவே உள்ளது. ஒன்றிணைவின் மூலமே நிலையானதும் ஆரோக்கியமானதுமான சமூகத்தைத் தோற்றுவிக்க முடியும் - என்றார். (த-61)

# கற்பித்தல் முறையில் மாற்றம் கொண்டுவரச் சிந்திக்கவேண்டும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிக்கிறார்

கொழும்பு, ஏப். 6

அரச பாடசாலைகளில் கற்பித்தல் முறையில் மாற்றங்கள் கொண்டுவருவது குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும். கற்பித்தல் செயற்பாடுகளின்போது, மாணவர்களின் வீட்டுச் சூழல் தொடர்பிலும் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பு 2 இல் பாடசாலைக்கட்டடம் ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் வாழும் பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவது கடினமான விடயம். இந்தச் சவாலைப் பாடசாலையின் அதிபர், பழைய மாணவர் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட அனைவரும் வெற்றிகரமாக எதிர்கொண்டிருப்பதற்கு இந்தக் கட்டடத் திறப்புவிழா ஒரு கட்சியாக உள்ளது.

வருமானம் குறைந்த குடும்பங்களிலுள்ள பிள்ளைகளும் ஆங்கில மொழியில் கற்கவேண்டும் என்பதற்காகப் பன்னாட்டுப் பாடசாலைகளில் சேர்கின்றனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம் மாணவர்கள் பன்னாட்டுப் பாடசாலைகளில் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர். அரச பாடசாலைகளில் கல்வித்தரம் குறைவாக இருக்குமோ என்ற யூகத்தில், மாணவர்களைச் சேர்ப்பதில் பெற்றோர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலைகளுடன் போட்டிபோட்டு, தரமான மாணவர்களை அரச பாடசாலைகளுக்குள் உள்ளீர்க்கவேண்டும். இது எமக்கு மத்தியிலுள்ள மிகப்பெரிய சவால்.

பகுதிநேர வகுப்புகளை நடத்தியாவது அரச பாடசாலைகளின் கல்வித்தரத்தை மேம்படுத்தமுடியுமா என்பது குறித்தும் சில அரசியல்வாதிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அரசியல்வாதிகளால் மாத்திரம் மாணவர்களை ஊக்கப்படுத்த முடியாது. அதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

பாடசாலைகளில் பௌதீக வளங்களை அதிகரிப்பதுடன், கற்பித்தல் முறையிலும் மாற்றங்கள் கொண்டுவருவது குறித்தும் தீவிரமாக சிந்திக்கவேண்டும். கற்பித்தல் செயற்பாடுகளின்போது, மாணவர்களில் வீட்டுச் சூழல் தொடர்பிலும் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும். பெற்றோர்களுடன் சினேகபூர்வமாக அணுகித்தான் இந்த விடயத்தை கையாளவேண்டும்.

ஆசிரியர்கள் மீதுள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் இவற்றை ஒரு சுமையாக சுமத்தவில்லை. வெளிநாடுகளில் நடப்பதை அடிப்படையாக வைத்து கற்பித்தல் முறையில் மாற்றங்களை கொண்டுவந்து, நவீன உபாயங்களை உட்புகுத்தித்தான் இப்படியான பாடசாலைகளின் கல்வித்தரத்தை மேம்படுத்த வேண்டும் - என்றார். (த-61)

# தமிழ்ப் பொலிஸாரை உள்வாங்கின் தேசிய, மத நல்லிணக்கம் வளரும்

## நிமல் சிறிபால டி சில்வா எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 6

பொலிஸ் சேவைக்குத் தமிழ் மொழிமூலமான உறுப்பினர்களை உள்வாங்குவதன் மூலம் நாட்டின் தேசிய மற்றும் மதநல்லிணக்கத்துக்குப் பெரும் சக்தியாக அமையும். இராணுவத்துக்கு எதிராகப் புலம்பெயர் அமைப்பு மற்றும் இனவாதிகள் மேற்கொள்ளும் பரப்புரைகளைத் தோற்கடிக்க கட்சிபேதமின்றிச் செயற்படவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் பாதீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் சேவையில் இணைந்துகொள்ள யாழ்ப்பாணத்தில் இருக்கும் தமிழ் மொழி மூலமான ஆண்களும் பெண்களும் விருப்பம் இல்லாவிட்டால் மலையகத்தில் தமிழ், சிங்கள மொழி தெரிந்தவர்கள் இருக்கின்றனர். அவர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தேசிய மற்றும் பன்னாட்டு ரீதியில் அரசதலைவர் எடுத்துவரும் முயற்சி பாராட்டத்தக்கது. கடந்த மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைப் பேரவையில் இராணுவத்துக்கும் நாட்டுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிராகரித்து இலங்கையின் நிலைப் பாட்டை அறிவிக்க அயலுறவு அமைச்சர் ஊடாக நடவடிக்கை எடுத்திருந்தார். இதன் மூலம் அரசதலைவர் நாட்டைப் பாதுகாத்த இராணுவத்தை பாதுகாத்துள்ளார்.

இராணுவத்தினர் தொடர்பாகப் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் இனவாதிகள் பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டுவருகின்றனர். அதை முறியடிக்க கட்சிபேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் - என்றார். (த-31)

# இராணுவத் தளபதிக்கு ஊடக அமைப்பு மதிப்பு

கொழும்பு, ஏப். 6

இராணுவத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, இராணுவத்தின் மனித நேய வேலை திட்டங்களுக்கான நாடளாவிய இணைப்பாளர் ஏ. செல்வா ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் மனித நேய சேவைகளைப் பாராட்டி அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தால் விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். யாழ்ப்பாண மாவட்ட மக்களின் வாழ்வாதாரம், இயல்பு வாழ்க்கை, வாழ்க்கை தரம், இயற்கையோடு இயைந்த வாழ்வியல், பொருளாதாரம், அபிவிருத்தி, ஆகியவற்றை மேம்படுத்தி கட்டியெழுப்புவதில் சேவை ஆற்றி வருகின்றனர் என்று போரத்தின் தலைவர் கலாபூசணம் எம்.ஏ. பகுர்தீன் தெரிவித்தார். (த)

# பன்னாட்டில் இலங்கையை நகைப்புக்குள்ளாக்காதீர்கள்!

## ஹெகலிய ரம்புக்வெல எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, ஏப். 6

மனித உரிமைப் பேரவையின் பரிந்துரைக்கு இணை அனுசரணை வழங்குவதாகக் கைச்சாத்திட்டு பின்னர் அதில் சில விடயங்களை நிராகரிப்பதாகத் தெரிவிப்பது நகைப்புக்குரியது. அதனால் இலங்கையை பன்னாட்டு மட்டத்தில் நகைப்புக்குள்ளாக்குவதை அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று முதன்மை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்கவல தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் பாதீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

போர்ப்பாதிப்பு தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப் பட்ட தருஸ்மன் ஆணைக்குழுவின் அறிக்கையில் போரில் 40ஆயிரம் பேர் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனைத்தொடர்ந்தே ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் எமது நாட்டுக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இந்த அரசு ஆட்சிக்குவந்த பின்னர் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தது.

அமைச்சர் மங்கள சமரவீர இன்னும் அயலுறவு அமைச்சின் நடவடிக்கைகளில் தலையிட்டு வருகின்றார். வெளிநாட்டு நீதிபதிகள் எமது நீதிமன்றங்களில் அமர்வது பிரச்சினை இல்லை என்று தெரிவிக்கிறார். அதனால் அரசதலைவர் அமைச்சர் மங்கள சமரவீரவின் நடவடிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எமது நாடு பன்னாட்டு ரீதியில் தொடர்ந்தும் நகைப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும் என்றார். (த-31)


# பேருந்து நிலையத்தில் மோதலில் இருவர் கைது

கொழும்பு, ஏப். 6

தனியார் மற்றும் அரச போக்குவரத்து தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலால் இருவர் காயமடைந்துள்ளனர். மற்றுமிருவர்கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை பொதுப் பேருந்து தரிப்பிட நிலையத்தில் இது இடம்பெற்றுது.

அரச போக்குவரத்து நேரக்கணிப்பு முகாமையாளர் சா. புஸ்பராஜா (வயது - 49) உதவி முகாமையாளர் நே.ரத்நேஸ்வரன்(வயது-51) காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பொலிஸாரின் தலையீட்டை அடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியது. (த)



# மோடிக்கு அமோக ஆதரவு!

புதுடெல்லி,ஏப்.6
பாலகோட் தாக்குதல், 10சதவீத இட ஒதுக்கீடு, விவசாயிகளுக்கு 6 ஆயிரம் ரூபா வழங்குவது ஆகிய திட்டங்களால் மோடிக்கு அமோக ஆதரவு ஏற்பட்டுள்ளதாகவும், ரபேல்விவகாரம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும் கருத்துக்கணிப்பு ளியாகியுள்ளது.

லோக்நிதிதி இந்து ஆங்கிலநாளிதழ், திரங்கா தொலைக்காட்சி, சிஎஸ்டிஎஸ் ஆகியவை இணைந்து இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தின. அதிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக்கூட்டணிஅறிவித்தசில திட்டங்கள் தேர்தல் நேரத்தில் குறிப்பிடத் தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளன. உயர் சாதியினர் உட்பட பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு, சிறு,'குறு விவசாயிகளுக்கு 6 ஆயிரம் உதவித்தொகை, பாலகோட் தாக்குதல்எனஅடுத்தடுத்த3விவகாரங்களால் மோடிக்கான ஆதரவு உயர்ந்து43சதவீதமக்கள்அவரை ஆதரிப்பது தெரியவந்துள்ளது.

2018ஆம் ஆண்டின் கடைசியில் நடைபெற்ற மாநிலத் தேர்தல்களில் சத்தீஸ்கர், ராஜஸ்தான், மத்திய பிரதேசம்ஆகிய3இடங்களைக்காங்கிரஸ்கைப்பற்றியநிலையில், மோடிக்கான ஆதரவு அதிகரித்திருப்பதாகக் கருத்துக்கணிப்புநிறுவுவது குறிப்பிடத்தக்கது.



# “தமிழரைத் தலைமை அமைச்சராக்குவோம்”

## நடிகர் மன்சூர் அலிகான் தெரிவிப்பு

தமிழகம்,ஏப்.6
எதிர்வரும் இந்தியத் தேர்தலில் திண்டுக்கல் தொகுதியில் 'நாம் தமிழர் கட்சி' சார்பாகப் போட்டியிடுகிறார் திரைப்பட நடிகர் மன்சூர் அலிகான். உணவகங்களுக்குச் சென்று றொட்டி தயாரிப்பது, செருப்புத் தைப்பது, பெண்களுக்குக் காய்கறிநறுக்கிக்கொடுப்பதுஎனப்பரப்புரைக் களத்தில் வித்தியாசமான வேலைகளைச் செய்து கவனத்தை ஈர்த்து வருகிறார்.

இந்தநிலையில்அவர் ஊடகங்களுக்கு வழங்கி செவ்வி ஒன்றில் ஏழு தமிழர்களைவிடுதலைசெய்ய முடியாத காங்கிரஸ் மக்களிடம் வாக்குச் சேகரிக்க வருகிறது. தமிழக அரசு அவர்களை விடுதலை செய்துவிட்டு மக்களிடம் வாக்குச் சேகரிக்க வந்திருக்க வேண்டும்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தன்னலம் இல்லாதவர்கள். ஆகையால் தமிழர் ஒருவரைத் தலைமை அமைச்சராகப் பதவியில் அமர வைப்போம் -என்றார்.



# காங்கிரஸ் அபார வெற்றி பெறும்!

திருவனந்தபுரம்,ஏப்.6
எதிர்வரும்இந்தியத்தேர்தலில்கேரளாவில்காங்கிரஸ்கூட்டணிபெரும்வெற்றி பெறும்எனக்கருத்துகணிப்புமுடிவுகள் தெரிவிக்கின்றன. ஆளும் இடதுசாரிகளுக்குப் பெரும் பின்னடைவு ஏற்படும் எனவும், திருவனந்தபுரம் தொகுதியில் பா.ஜ.க. வெற்றி பெறுகின்ற வாய்ப்பு இருப்பதாகவும் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

கேரளாவில் மக்களின் கருத்துக்களை அறியும் வகையில் மலையாள மனோரமா பத்திரிகை, கார்வி நிறுவத்துடன் இணைந்து தேர்தலுக்கு முந்தைய கருத்து கணிப்பை நடத்தியது. இந்தக் கருத்து கணிப்பு முடிவிலேயே இந்த விடயம்வெளியாகியுள்ளது. இதில்காங்கிரஸ்தலைமையிலான அணி, கேரளாவிலுள்ள 20 தொகுதிகளில் 13 இடங்களைக்கைபற்றும்எனத்தெரியவந்துள்ளது. 3 தொகுதிகளில் கடும் போட்டி நிலவும் என்றும் அதில் 2 இடங்களைக் காங்கிரஸ்அணிபெறவாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் மாநிலத்தில் ஆளும் இடதுசாரிக் கூட்டணி 4 இடங்களில் மட்டுமே வெல்லும் எனக் கருத்து கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

# எங்கள் குரல் டெல்லியில் ஒலிக்கும்

## கமல் உறுதி

மதுரை,ஏப்.6
எவர் தலைமை அமைச்சராக வந்தாலும் எங்களது குரல் டெல்லியில் ஒலிக்கும் என மக்கள் நீதிமையத்தின் தலைவர் கமலஹாசன் தெரிவித்தார். மதுரைத் தொகுதியில் மக்கள் நீதி மையம் சார்பில் எம். அழகர் போட்டியிடுகிறார். இவரை ஆதரித்துப் பேசியபோதே கமலஹாசன் இவ்வாறு தெரிவித்தார்.

எங்களுக்கு நாட்டு நலன்தான் முக்கியம். தலைமைஅமைச்சர்யார்என்பது முக்கியமல்ல.

எவர் வந்தாலும் தமிழகத்துக்காகக் குரல் கொடுக்கும் ஒரு கூட்டம் டெல்லியில் இருக்க வேண்டும். அந்தக் கூட்டத்தை நான்தயார்ப்படுத்திக்கொண்டிருக்கிறேன்- என்றார்.

# ‘வாக்குச்சாவடியில் நமது ஆள்களே இருப்பர் புரிகிறதா?’’

## அன்புமணியின் பேச்சால் சர்ச்சை



திருப்போரூரில் வேட்பாளரை ஆதரித்துப்பேசியபாட்டாளிமக்கள்கட்சியைச் சேர்ந்த அன்புமணி ராமதாஸ், நமது ஆட்கள்தான்வாக்குச்சாவடியில்இருப்பார்கள். என்ன புரிகிறதா?" என்றார். அவரது இந்தப் பேச்சுச் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அங்குஅவர்மேலும் பேசியதாவது, கூட்டணிக் கட்சியினருக்கு ஒரு செல்வாக்கும் இல்லை. தேர்தல் அன்று என்ன நடக்கும், வாக்குச்சாவடியில் என்ன நடக்கும். நாம் தான் இருப்போம். நமது ஆள்கள் மட்டும் தான் இருப்பார்கள். என்ன புரிகிறதா? அப்புறம் என்ன சொல்ல வேண்டுமா? என்றார். இதற்கு அனைவரும்கைதட்டினர். இதுகடுமையாகவிமர்சிக்கப்பட்டு வருகிறது. கள்ள வாக்குப் போடுவதை ஊக்குவிக்கும் வகையில் அன்புமணி ராமதாஸ்பொதுமேடையில்தொண்டர்களைப்பார்த்துப்பேசியதாக அவர்மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.



# இன்றைய நாள்

**மேடம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். பணவரவை விட செலவு கூடும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும்..

**இடபம்:** நண்பர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி தாமாக தேடி வரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். பெண்கள் விருந்து விழாவில் கலந்து கொள்வர்.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் சார்ந்த நிலுவைப் பணி நிறைவேறும்.

**கடகம்:** எதிர்பார்த்த நன்மை எளிதாக கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். கூடுதல் நேரம் பணிபுரிவீர்கள். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படலாம்.

**சிம்மம்:** பேச்சில் ஆரவாரம் தவிர்ப்பது நல்லது. எதிர்பார்ப்பு நிறைவேற புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும்.

**கன்னி:** கடந்த கால அனுபவத்தால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உருவாகும். உபரிவருமானம்கிடைக்கும். தாய்வழி உறவினர் பாசத்துடன் நடந்து கொள்வர்.

**துலாம்:** எதிரியால் இருந்த தொல்லை மறையும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். உபரி வருமானம் கிடைக்கும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உண்டு.

**விருச்சிகம்:** நண்பர் அதிக எதிர்பாப்புடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். முக்கிய செலவுகளுக்கு சேமிப்பு பணம் செலவாகும்.

**தனுசு:** அடுத்தவரின் தவறுக்கு சிரமப்படலாம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற்றுவது தாமதமாகும். மிதமான பணவரவு உண்டு.

**மகரம்:** நேர்மை எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறை வேறும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும்.

**கும்பம்:** அவசரப்பணி சிரமத்திற்கு ஆளாகலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். லாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** உறவினரிடம் மனம் விட்டு பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உருவாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

# பிறேசில் பொலிஸ் அதிரடி: 11 பேர் சுட்டுக்கொலை

## ‘ஏ.ரி.எம்.’ஐத் தகர்த்ததாகக் குற்றச்சாட்டு

சாவோ பாலோ,ஏப்.6
வங்கிகளால் பணம் நிரப்பப்பட்ட தானியங்கி இயந்திரங்களைத் தகர்க்கின்ற முயற்சியில் ஈடுபட்ட 11 பேரை பிறேசிலில் பொலிஸார் சுட்டுக்கொன்றனர். இந்தச் சம்பவம் பிரேசிலில் நடந்தது.





இது குறித்து மேலும் தெரிய வருவதாவது: பிரேசிலின் கிழக்கு நகரமான கவுரே ரெமா நகராட்சியில் இரண்டு வங்கிகளில் ஏ.ரி.எம். இயந்திரங்களைத் தகர்த்துக் கொள்ளையடிக்கும் முயற்சி நடைபெற்றது. இதை முன்பே அறிந்த பிறேசில் இராணுவப் பொலிஸார் அவர்களைச் சுற்றிவளைத்துப் பிடிக்க முயன்றனர். ஆனால் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. இதனால் தப்பிச்சென்றவர்களில் 11 பேரைச் சுட்டுக்கொன்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் 25 பேர் தொடர்புபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. வங்கிப் பகுதியைச் சுற்றி நடைபெற்ற தேடுதல் வேட்டையில் ஏழு பெரிய துப்பாக்கிகள், நான்கு கைத் துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், குண்டு துளைக்காத ஆடைகள் ஆகியவற்றைப் பொலிஸார் மீட்டனர். இந்தச் சம்பவம் குறித்து சாவோ பாலோ மாநில ஆளுநர்ஜாவோடோரியாபொலிஸாருக்குத் தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



# சுரங்கத்தில் வெடி விபத்து 7 பேர் உடல் கருகிச் சாவு

பீஜிங்.ஏப்.6
சீனாவில் சுரங்கத்துக்குள் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிச் சாவடைந்தனர். சீனாவின் கியாசூ மாகாணத்தில் உள்ள பீஜி மற்றும் சிச்சுவான் மாகாணத்தின் தின்கிங்யாபின் நகரங்களை இணைக்கும் அதிவிரைவு நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டு வரும் சுரங்கப்பாதை யிலேயே இந்த விபத்து நடந்தது. ஏராளமான தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தபோது, சற்றும் எதிர்பாராத வகையில் சுரங்கத்துக்குள் வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால் சுரங்கம் முழுதும் தீப்பற்றி எரிந்தது.
தொழிலாளர்கள் அனைவரும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அலறி அடித்தபடி சுரங்கத்தை விட்டு வெளியேறினர். எனினும் தீயின் கோரப்பிடியில் சிக்கி 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிச் சாவடைந்தனர். 2 பேர் பலத்த காயம் அடைந்தனர்

# விபத்துக்குள்ளான ‘போயிங்’ வானூர்தி பல்டி அடித்து விழுந்ததாகத் தகவல்

வோஷிங்டன்.ஏப்.6
அமெரிக்க வானூர்தித் தயாரிப்பு நிறுவனமான போயிங் நிறுவனத்தின் ‘போயிங் 737 மேக்ஸ் 8’ ரக வானூர்தி கடந்த மாதம் எதியோப்பியாவில் விபத்துக்குள்ளானது. அது விபத்துக் குள்ளாவதற்கு முன்னர் பல முறை சுழன்றடித்துப் பின்னரே விழுந்தது என்று முதல் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.
அது தரையில் வீழ்வதற்கு முன்னர், போயிங் நிறுவனம் வழங்கிய செயல்முறைகளை அந்த வானூர்தியில் இருந்த விமானிகள் மீண்டும் மீண்டும் பின்பற்றியிருப்பதும் தெரியவந்திருக்கிறது. விமானிகள் முயற்சிகள் எடுத்தபோதும், வானூர்தி வீழ்வதைத் தடுக்க முடியவில்லை என்று தெரியவந்துள்ளது.
இந்த விவரம் வெளியிடப்பட்ட பின்னர் போயிங் தலைமைச் செயல் அதிகாரி மன்னிப்புக் கோரினார்.
எதியோப்பியா மற்றும் இந்தோனேசியாவில் அடுத்தடுத்து நடந்த இந்த ரக வானூர்திகளின் விபத்துக்களைக் குறிப்பிட்டே போயிங் நிறுவனத் தலைமைச் செயல் அதிகாரி மன்னிப்புக் கோரினார்.
இந்த இரண்டு விபத்துக்களின்போதும் குறித்த ரக வானூர்திகளில் பயணம் செய்த அனைவரும் சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது.





# ‘பிரெக்ஸிட்’டைத் தாமதப்படுத்துகின்ற தீர்மானம் பிரிட்டனில் நிறைவேற்றம்

லண்டன்,ஏப்.6
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கான ‘பிரெக்ஸிட்’ நடவடிக்கையைத் தாமதப்படுத்துமாறு வலியுறுத்திப் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது.
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பாக 2016ஆம் ஆண்டு பொது வாக்கெடுப்பு நடந்தது. அதில் மக்கள் அதற்கு ஆதரவு தெரிவித்தனர். 2019ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதிக்குள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற முடிவு செய்யப்பட்டது. இதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரிட்டன் தலைமை அமைச்சர் தெரசா மே ஏற்படுத்திய ஒப்பந்தம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற முடியாமல் இழுபடுகிறது.
இதனால் ‘பிரெக்ஸிட்’ நடவடிக்கை சிக்கலானது. இதைத் தவிர்க்கும் விதமாக ‘பிரெக்ஸிட்’ நடவடிக்கையைத் தாமதப்படுத்த வலியுறுத்திப் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. கீழ் சபையில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் மேல் சபைக்கு வாக்கெடுப்புக்கு விடப்பட்டுள்ளது.
அங்கும் அது நிறைவேறிவிட்டால் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சுக்களை நடத்தி ‘பிரெக்ஸிட்’டைத் தாமதப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தெரசா மே தள்ளப்படுவார்.

# தலிபான்கள் தாக்குதல் படையினர் பலர் சாவு

காபூல்.ஏப்.6
ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும் அரச படையினருக்கும் இடையே நடந்த போரில் படையினர் தரப்பில் பலர் சாவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆப்கானின் மேற்கு மாகாணமான பத்கிஸ் மாகாணத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது. சாவடைந்த படைச் சிப்பாய்கள் குறித்த சரியான தொகை அறிவிக்கப்படவில்லை. இந்தத் தாக்குதலில் தலிபான்கள் 30 பேர் சாவடைந்ததாக ஆப்கான் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சாவடைந்த அரச படைச் சிப்பாய்களின் தொகை நூறுக்கு மேற்பட்டதாக இருக்கும் என்று தெரிவிக்கின்ற அரச தரப்புக்கள் இன்னமும் அதை உறுதியாகச் சொல்லவில்லை.
அண்மைக்காலமாக அரச படையினருக்கு எதிரான தலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.
கடந்த மூன்று வருடங்களில் தலிபான்களின் ஆதிக்கம் ஆப்கானிஸ்தானில் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# விவாகரத்துக்கு 35பில்லியன் ரூபா இழப்பீடு வழங்கினார் ‘அமேசன்’ நிறுவுனர்

வோஷிங்டன்.ஏப்.6
‘அமேசன்’ என்கிற இணைய வர்த்தக நிறுவனத்தின் தலைவரும், உலகின் மிகப் பெரிய பணக்காரருமான ஜெவ்ப் பெசோஸ் தனது மனைவி மெக்கின்ஸியிடமிருந்து விவாகரத்துப் பெற்று அதற்கு இழப்பீடாக 35 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.
அத்தோடு, அமேசனில் மெக்கின்ஸிக்கு உள்ள நான்கு சதவீத பங்கை அவர் தொடர்ந்து பெறுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதற்கு முன்புவரை, கலை வியாபாரி அலெக் வொலின்ஸ்டைன் அவரது மனைவி ஜோசலினுக்கிடையேயான 3.8 பில்லியன் விவாகரத்து இழப்பீடு உலகளவில் அதிகமானதாகக் கருதப்பட்டது. அதை இப்போது ஜெவ்ப் பெசேஸ் வழங்கிய இழப்பீடு அதைப் பின்தள்ளியிருக்கிறது.



## கூட்டமைப்பின்...

மகிந்த அணி வலியுறுத்தி வந்திருந்த நிலையிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி இறுதி நேரத்தில் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் வெளியேறியது.
ஒக்ரோபர் 26ஆம் திகதிய அரசியல் சூழ்ச்சி காரணமாக நடப்பு ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்படவில்லை. ஜனவரி மாதம் இடைக்கால கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது நிறைவேற்றப்பட்டிருந்த நிலையில், மார்ச் மாதம் 5ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டிருந்தது. முதலாம் வாக்கெடுப்பு நிறைவுற்று, இரண்டாம் வாக்கெடுப்பு நிறைவுற்று, அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதங்கள் நடைபெற்றிருந்தன.
அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் இரண்டு அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்டிருந்தது. மகிந்த அணியினர், வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்து ஐக்கிய தேசியக் கட்சி அரசை வீட்டுக்கு அனுப்புவோம் என்று தொடர்ச்சியாக முழங்கி வந்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவையும் அவர்கள் கோரியிருந்தனர். எதிர்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மகிந்த தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் இணைந்து செயற்பட வேண்டுமானால், வரவு செலவுத் திட்டம் மீதான மூன்றாம் வாக்கெடுப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்து வாக்களிக்கவேண்டும் என்று மகிந்த அணி வலியுறுத்தி வந்தது.
நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான மூன்றாம் வாக்கெடுப்பு நேற்று இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.
மகிந்த அணியும், மக்கள் விடுதலை முன்னணியும் எதிராக வாக்களித்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இறுதி நேரத்தில் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் சபையிலிருந்து வெளியேறி இருந்தார்கள். (ஓ.5.22)

## எந்த...

யாழ்ப்பாணம், ஏப். 6
சுன்னாகம் பிரதேசத்தில் கிணறுகளில் கழிவு ஒயில் கலந்த விவகாரத்தில் நொதேன் பவர் நிறுவனத்தைக் காப்பாற்றிய முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர், மக்களிடம் இனி எந்த முகத்துடன் போகப்போகின்றார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு அவர்கள் துரோகம் இழைத்தமை, நீதிமன்றத் தீர்ப்பு ஊடாக உறுதியாகியுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.
சுன்னாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் பரவுவதற்கு நொதேன் பவர் நிறுவனமே காரணம் என்றும், இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடாக 2 கோடி ரூபா வழங்குமாறும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இது தொடர்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் தவராசா மேலும் தெரிவித்ததாவது:
சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலக்கவில்லை என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். அவர் மூடி மறைத்த விடயங்கள் உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஊடாக அம்பலமாகியுள்ளன. இந்த விவகாரத்தில் நான் வேண்டுமென்று ஊழல் புரிந்ததேன் என்று யாராவது கூறினால் வழக்குத் தாக்கல் செய்வேன் என்று மற்றொருவர் கூறினார். அவர் தனது அதிகாரத்துக்கு உட்படாத விடயத்தில் முண்டியடித்து மூக்கை நுழைத்து போலி அறிக்கைகள் விடுத்து மக்களை அடகு வைத்தமையும் தற்போது நிரூபிக்கப்பட்டு விட்டது. அந்தப் பகுதி மக்களை இவர்கள் எந்த முகத்துடன் சென்று பார்ப்பார்கள்?
சுன்னாகம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள மக்கள் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமைக்கு எதிராகப் போராடினார்கள். போராட்டத்தை முடக்குவதற்காக விக்னேஸ்வரன், ஐங்கரநேசன் இணைந்து ஆய்வு செய்வதாகக் கூறி பெருமளவு நிதியை வீணாக்கினார்கள். வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களை அழைத்து வந்துள்ளோம் என்றெல்லாம் படம் காட்டினார்கள். இவர்களின் அறிக்கைகள் எல்லாம் பொய் என்று பலமுறை அப்போதே எடுத்துரைத்தேன். அவர்கள் அதனை ஏற்கவில்லை. சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் மாசுக்கள், ஆபத்தான உலோகங்கள் இல்லை என்று அறிக்கை வெளியிட்டார்கள். அந்த அறிக்கை பொய்யானது. அந்த அறிக்கை விவகாரத்தில் ஊழல் நடந்துள்ளது என்று மாகாணசபையில் நான் திரும்பத் திரும்பக் கத்தினேன். நான் சொல்வதை அவர்கள் மறுதலித்து வந்தார்கள்.
தற்போது நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக நடந்தது என்ன என்ற உண்மை வெளிவந்திருக்கின்றது. இவர்கள் இருவரினதும் மோசடிகள் தொடர்பில், அவர்கள் இருவருக்கும் எதிராக தனியாக வழக்குத் தாக்கல் செய்யவேண்டும். மோசடி ஆய்வுகளுக்கு செலவிட்ட பணத்தை அவர்களிடமிருந்து அறவிடவேண்டும் என்றார்.

(ஓ.5.105)

## கட்சிக்...

னர் அரசு கண்டுகொள்வதில்லை. திட்டங்களை நிறைவேற்றவில்லை என்று காரசாரமாக கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாலையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
வரவு - செலவுத் திட்ட இறுதி வாக்கெடுப்புக்கு முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் ரெலோவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் பங்கேற்கவில்லை.
'தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்கவில்லை. அவற்றை நிறைவேற்றுவோம் என்று கூடக் கூறுவதற்கு அரசு தயாராக இல்லை. அரசியல் தீர்வை எதிர்பார்த்து நிற்கையில், அற்ப அபிவிருத்திக்காக அரசை ஆதரிப்பதாகவே மக்கள் கருதுகிறார்கள். குழப்புகின்றோம் என்ற கருத்தோ, கட்சி முடிவை மீறிச் செயற்பட்டேன் என்ற பழிச்சொல்லோ வேண்டாம் என்பதற்காக மட்டும் வாக்களிப்பது மனதை உறுத்துகின்றது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.
தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கூட்டமைப்புக்கு வாக்குறுதி வழங்கிவிட்டு, ஓர் அமைச்சரையும் கட்சியையும் வளர்க்கும் செயற்பாடே வன்னியில் தொடர்கின்றது. வாக்குறுதி வழங்கப்படுகின்றதே தவிர செயற்படுத்தப்படவில்லை. எம்மை நம்ப வைத்து ஏமாற்றுகின்றனர். இப்படியே தொடர்ந்தால் வன்னியில் அடுத்த தேர்தலில் கூட்டமைப்பு இரண்டு ஆசனத்தைப் பெறும் நிலைதான் ஏற்படும். கூட்டமைப்பை மக்களிடமிருந்து செல்வாக்கை இழக்கச் செய்யும் நடவடிக்கையே தொடர்கின்றது - என்றார்.
'வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம், மகாவலி அதிகார சபை, தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றின் நடவடிக்கைகளால் வன்னியில் நிலம் எஞ்சுமா என்ற சந்தேகம்தான் ஏற்படுகின்றது. அபிவிருத்தியை விட எமது மண்ணையே பாதுகாக்கவேண்டும்' என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.
கல்முனை தொடர்பில் வாக்குறுதி வழங்கப்பட்டாலும் தீர்வு கிடைக்கவில்லை. தீர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். எமது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டை எதிர்ப்போம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பதிலளித்தார்.
எமது ஆதரவைக் கோரும் தேசியக் கட்சிகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமது கட்சிகளை வளர்க்க அனுமதிக்கக் கூடாது என்று பலமுறை கூறியும், அந்தச் செயற்பாடு தொடர்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.
'இன்றைய நிலையில் தீர்வு இல்லை. அபிவிருத்தி இல்லை என்ற நிலமை ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட மக்களால் அதனைச் சகிக்க முடியாது. அபிவிருத்திக்காகவாவது ஆதரிக்கவேண்டிய நிலைமை உள்ளது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.
இறுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாக்கெடுப்பில் அரசை ஆதரித்து கூட்டமைப்பின் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர். (ஓ.5.105)

## கொலைக்...

கொலை செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட நபர், குற்றவாளியாக மன்றால் இனங்காணப்பட்டார். அவருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்டவரின் மனைவிக்கு 8 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவும் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி பணித்தார்.
இரணை இலுப்பைக்குளம் பகுதியில் விக்னேஸ்வரன் யோகேஸ்வரன் என்ற குடும்பத் தலைவரை 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி கொலை செய்த வழக்கிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
குற்றவாளிக்கு கொலை செய்த குற்றத்துக்காக பத்து ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்ததுடன் கொலை செய்யப்பட்ட குடும்பத் தலைவரின் மனைவிக்கு இழப்பீடாக 8 லட்சம் ரூபாவும் வழங்கவும் நீதிபதி கட்டளை பிறப்பித்தார்.
இழப்பீட்டை வழங்கத் தவறினால் மேலும் இரண்டு வருடங்கள் கடூழிய சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் அத்துடன் பத்தாயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்தவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தண்டப்பணம் பத்தாயிரம் ரூபாவையும் செலுத்தவும் தவறினால் மூன்று மாத காலம் சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் எனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (ஓ.5.60)

## மின்வெட்டு...

முறை நீக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.
'நாட்டில் ஏற்பட்டுள்ள 300 மெகா வாட்ஸ் மின் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான வழிவகைகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பற்றாக்குறை கடந்த ஆண்டு தொடக்கம் உள்ளது. களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலைத்தில் 500 தொடக்கம் 600 மெகா வோட்ஸ் மின்சாரத்தை கூடுதலாக உற்பத்தி செய்ய முடியும். மின் நெருக்கடிக்குத் தீர்வு காண குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலத் திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகிறது. தேசிய மின் வழங்கலில் 3 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரத்து 500 மெகா வோட்ஸ் மின் உற்பத்தியை அதிகரிக்கும் நீண்டகாலத் திட்டத்துக்கான வரைவு அமைச்சரவையில் அடுத்தவாரம் முன்வைக்கப்படவுள்ளது. அதனால் குறுகிய காலத் தீர்வாக தேசிய மின் வழங்கலில் மேலும் 500 தொடக்கம் 600 மெகா வாட்ஸ் மின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது' என்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறினார். (ஓ.5)

## களவாக...

நொச்சிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று ஒப்படைத்துள்ளனர்.
கிளிநொச்சி கனகபுரத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாடு செல்வதற்காக கடத்தல்காரர்களிடம் பெருந் தொகைப் பணத்தை அவர்கள் வழங்கியுள்ளதாக விசாரணைகளின்போது கைதானவர்கள் தெரிவித்துள்ளதாக அறிய முடிகின்றது. (ஓ.5)

## 18 இந்திய...

மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 18 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.
பருத்தித்துறை கடற்பரப்பிலிருந்து மேற்காக 16 மைல்களுக்கு அப்பால் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடற்படையினர் இவர்களை கைது செய்துள்ளனர். (ஓ.5.26)

## வாக்கெடுப்பில்...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நடுநிலமை வகித்தார். கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், ரெலோ அமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான கோடீஸ்வரன் உள்ளிட்டோர் ஆதரவாக வாக்களித்தனர்.
வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போதும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வாக்கெடுப்பில் பங்கேற்காது நடுநிலமை வகித்தார். அவரது கட்சியைச் சேர்ந்த மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் ஆதரவாக வாக்களித்திருந்தார்.
வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதில்லை என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ முடிவு எடுத்திருந்தது. அதற்கு அமைவாகவே வாக்கெடுப்பில் செல்வம் அடைக்கலநாதன் பங்கேற்கவில்லை. கோடீஸ்வரன், இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தமைக்காக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சியின் செயலர் சிறீகாந்தா அறிவித்திருந்த நிலையில், இறுதி வாக்கெடுப்பிலும் அரசுக்கு ஆதரவாக கோடீஸ்வரன் வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
இதேவேளை, அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் இரண்டு அமைச்சுக்கள் மீது வாக்கெடுப்பு கோரப்பட்டபோது நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த செல்வம் அடைக்கலநாதன் அரசுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். (ஓ.5.105)

## வறட்சிப்...

வுள்ளது. நிதி அந்தந்த மாவட்டச் செயலர்களிடம் வழங்கப்படும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. (ஓ.5)

## மைத்திரி...

ரும் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நயினாதீவுக்குச் செல்லும் அரச தலைவர், அன்றைய தினம் வலி. வடக்குப் பிரதேசத்தில் 35 ஏக்கர் நிலத்தையும் மக்களிடம் கையளிக்கவுள்ளதாக அறிய முடிகின்றது. (ஓ.5.105)

## புத்தாண்டை...

லங்கா சதொச நிறுவனம் அத்தியாவசிய பொருள்கள் பலவற்றின் விலைகளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் குறைத்துள்ளதாக நிறுவனத்தின் தலைவர் தாரிக் அறிவித்துள்ளார்.
சம்பா அரிசி 84 ரூபா, சிவப்பு அரிசி 57 ரூபா, வெள்ளைப்பச்சை அரிசி 67 ரூபா, வெள்ளைச் சீனி 97 ரூபா, நெத்தலி 669 ரூபா, பெரிய வெங்காயம் 74 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளன. (ஓ.5)

## லண்டன்...

ணத்தைச் சேர்ந்த இளைஞர் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த விபத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.
வடமராட்சி, கரவெட்டி துன்னாலை தெற்கு தல்லையப்புலத்தைச் சேர்ந்த பாலேந்திரநாதன் சுபேஸ் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். (ஓ.5)

## இருதய...

யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்குச் சிகிச்சைக்கு வரும் இருதய சத்திரசிகிச்சை நோயாளர்களை போதனாவிலுள்ள சில மருத்துவ நிபுணர்கள் கொழும்பு தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவருகின்றனர் என்று விடயத்தை வடக்கு மாகாண மருத்துவ மன்றத்தினர் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் போட்டுடைத்துள்ளனர். அதைக் கவனத்தில் எடுத்த அமைச்சர், போதனா மருத்துவமனைப் பணிப்பாளருக்கு அலைபேசியில் அழைப்பு ஏற்படுத்தி, கட்டில்கள் கொண்ட இருதய சத்திரசிகிச்சை விடுதியை உடனடியாகக் வழங்குமாறு கட்டளை இட்டுள்ளார்.
யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சை நிபுணருக்கு இதுவரை காலமும் விடுதி வசதி ஏற்படுத்தி கொடுக்காமை அங்கு இருதய சத்திரசிகிச்சைக்காக வரும் நோயாளர்களைக் கொழும்பு தனியார் மருத்துவமனைக்கு சில மருத்துவ நிபுணர்கள் அனுப்புகின்றனர் என்பது பற்றிய விடயத்தை வடக்கு மாகாண மருத்துவ மன்றம் அமைச்சரிடம் போட்டுடைத்துள்ளது. அவ்வாறான நடவடிக்கைக்கு கடும் கண்டனத்தையும் மன்றம் தெரிவித்தது. அதனையடுத்து அமைச்சர் ராஜித மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாண மருத்துவமன்ற மத்திய குழு உறுப்பினர்கள் சிலர், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவை கடந்த 28ஆம் திகதி கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர். அமைச்சரின் அழைப்பில் தாம் சென்றிருந்தோம் என்றும் கூறியுள்ள மன்றம், அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**120 மருத்துவர்கள்**

உள்ளகப் பயிற்சிகளை முடித்துவரும் மருத்துவர்களில் 20 பேரை, யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் விபத்துப் பிரிவுக்கும், 100 பேரை ஏனைய பிரிவுகளுக்கும் நியமிக்குமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார்.
மன்றத்தின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் இளஞ்சசெழிய பல்லவன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.
சிறுவர்களுக்கான மருத்துவமனை ஒன்றை இணுவில் மக்லெயோட் மருத்துவமனை அமைந்துள்ள இடத்தில் நிறுவ வேண்டும் என்று மன்றம் கோரியிருந்தது.
அந்த நிலத்தைச் சுவீகரிக்குமாறு அமைச்சர் போதனாவின் பணிப்பாளரிடம்கேட்டுக் கொண்டதோடு, அதன் பின்னர் தேவையான நிதி ஒதுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார் என்றும் மன்றம் கூறுகிறது.
அது பற்றி போதனாவின் பணிப்பாளரிடம் மன்றம் கேட்டபோது, காணி சுவீகரிப்புக்கான அதிகாரம் தன்னிடம் இல்லை என்று பதிலளித்திருந்தார் என்றும் மன்றம் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. கிளிநொச்சி மருத்துவமனை கதிரியக்கவியல் மருத்துவ நிபுணரை' பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கும் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கும் நியமிக்குமாறு மன்றம் அமைச்சரிடம் கோரியது.
உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணித்தார்.
பிளாஸ்டிக் மருத்துவ நிபுணர், தீக்காய நோயாளர்களுக்கான தனி அலகு அமைக்கப்பட வேண்டும் என்று முன்மொழிந்தார். அமைச்சரும் அதனை ஏற்றுக்கொண்டார்.
கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் இருதய மற்றும் நரம்பியல் பிரிவுகளை ஆரம்பிக்குமாறு மன்றத்தின் சார்பில் கோரப்பட்டது. அதையும் அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.
யாழ்ப்பாணப் பிராந்திய சேவைப் பணிப்பாளர் அமைச்சரின் உத்தரவை மீறி நடந்துள்ளார். அவரை உடனடியாக இடம்மாற்றி மருத்துவர் சத்திய மூர்த்தியை யாழ்ப்பாணப் பிராந்திய சேவைப் பணிப்பாளராகவும் நியமிக்க மன்றத்தின் சார்பில் கோரப்பட்டது. அந்தக் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று மன்றத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## அரசமைப்பு...

கைவிடப்பட்டன. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பினார்.
வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
'தமிழ் மக்களுக்கும் இறைமை உண்டு. எங்கள் அதிகாரம், எங்கள் உரிமைகளை நாங்கள் அனுபவிக்க இடமளிக்க வேண்டும்' எனவும் சம்பந்தன் கோரினார். (ஓ.5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 6

**கே.ஸி.ஸி.ஸி கழக துடுப்பாட்டத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிராஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரெயின்போ விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிறாஸ்கொப் பர்ஸ் அணியை எதிர்த்து றெஜின்போ அணி மோதவுள்ளது.

**வளர்மதி ச.ச.நி தாச்சித் தொடர்**

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60 ஆண்டுநிறைவை முன்னிட்டு தாச்சித் தொடரொன்று ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சங்கானை இளங்கதிர் ஏ அணியை எதிர்த்து சுதுமலை யுவ சக்தி அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் பி அணியை எதிர்த்து சாந்தை விநாயகர் ஏ அணி மோதவுள்ளது.

**செந்தமிழ் கழக கால்பந்தாட்டம்**

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் சித்திரை புத்தாண்ட முன்னிட்டு முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரொன்றை நடத்தி வருகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுப்பர் ராங் அணியை எதிர்த்து சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி அணியை எதிர்த்து விக்னேஸ்வரா அணி மோதவுள்ளது.

**சதுரங்கம்**

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான சதுரங்கத் தொடர் இன்றும் நாளையும் நாளைமறுதினமும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.



சென்றலைட்ஸ் வி.க



ஏபி வி.க

# சென்றலைட்ஸ், ஏபி கழகங்கள் இறுதியில் இன்று பலப்பரீட்சை!

யாழ்ப்பாணம், ஏப். 6

அரியாலையின் 100ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்படும் ரி20 தொடரின் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏபி கழக அணி இன்று மோதவுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நண்பகல் 1 மணிக்கு இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது. (ம-23)

## சதுரங்கத் தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 6

வடமராட்சி தம்பசிட்டி மேலைப்புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 112ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் நாளையதினம் சதுரங்கத் தொடரொன்றை நடத்தவுள்ளது. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் காலை 9 மணியிலிருந்து இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. (ம)

### சூதாட்டங்களை ஒழிக்க

## இன்டர்போலுடன் இணைந்த பன்னாட்டு கிரிக்கெட் சபை

கிரிக்கெட்டில் இடம்பெறும் ஊழல்கள் மற்றும் சூதாட்டங்களை ஒழிப்பதற்காக பன்னாட்டு பொலிஸ் அமைப்புடன் (இன்டர்போல்) இணைந்து செயற்பட பன்னாட்டுக் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக, பன்னாட்டுக் கிரிக்கெட் சபை ஊழல் தடுப்பு பிரிவு தலைவர் அலெக்ஸ் மார்ஷல், பிரான்ஸில் அமைந்துள்ள பன்னாட்டு பொலிஸ் அமைப்புத் தலைமையகத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தார்.

கிரிக்கெட்டில் ஊழலை ஒழிப்பதற்காக, பல்வேறு நாடுகளின் சட்ட அமுலாக்க அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது. எனினும், பன்னாட்டு பொலிஸ் அமைப்பு இணைந்து செயற்படும் போது, அதன் 194 உறுப்பு நாடுகளுடனும் பன்னாட்டுக் கிரிக்கெட் சபை சிறப்பான உறவைக் கையாள முடியும் என எதிர்பார்பதாக அவர் கூறினார்.

கிரிக்கெட்டில் சூதாட்ட முறையை ஒழிப்பதற்காக கடந்த சில ஆண்டுகளாக பன்னாட்டுக் கிரிக்கெட் சபை தீவிர முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வளர்மதி அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 6

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் புத்தூர் வளர்மதி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)




## யுத் வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 6

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவில் அச்சுவேலி யுத் அணி வெற்றிபெற்றது.

இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதியது. 2:0 என்ற நேர்செற் கணக்கில் யுத் அணி வெற்றிபெற்றது. (ம-23)




## டோனியை புகழ்ந்த நீதா அம்பானி

சென்னை - மும்பை அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் மும்பை அணி வெற்றி பெற்றது. அந்த வெற்றியை மும்பை இந்தியன்ஸ் உரிமையாளர் நீதா அம்பானி பெரியளவில் மகிழ்ச்சியுடன் கொண்டாடினார். டோனிக்கு எதிராக ஆடுவது சிறப்பு எனக் குறிப்பிட்டார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்:

12 ஆண்டுக்ளாக இந்தப் பயணத்தில் பின் தொடர்ந்து வந்துள்ளேன். நான் அதிகம் மதிக்கும் அணித் தலைவர் டோனி. ஆகவே அவருக்கு எதிராக நர்ங்கள் ஆடுவது எப்போதும் சிறப்பு வாய்ந்தது. ஆம் நாங்கள் தோற்றாலும் வென்றாலும் டோனிக்கு எதிராக ஆடுவது சிறப்புதான்- என்றார்.



## 12 மணி நேரத்துக்குள் 2 போட்டிகளில் அசத்திய மலிங்க

இலங்கை அணியின் வீரர் லசித் மலிங்க இந்தியாவில் இடம்பெற்று வரும் ஐ.பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடிவருகின்றார். இவர்கடந்த புதன்கிழமை சென்னை - மும்பை அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியின் போது 3 இலக்குகளைக் கைப்பற்றி அணியின் வெற்றிக்கு பங்களிப்பு செய்திருந்தார்.

இந்த நிலையில் இலங்கையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான உள்ளூர்ப் போட்டி ஒன்றின் அணித் தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில் அதில் அவர் விளையாடுவாரா என்ற கேள்வி இருந்தது. எனினும் மும்பை - சென்னை போட்டி முடிவடைந்த கையோடு அங்கிருந்து 2அரை மணிநேரத்தில் இலங்கையை வந்தடைந்து உள்ளூர் போட்டியில் கலந்து கொண்டு 6 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தியிருந்தார். 12மணிநேரத்துக்குள்இரண்டு அணிகளுக்காக விளையாடி அசத்தியுள்ளார் இவர்.

# எய்பர் அணி சிறப்பாட்டம்



ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம் பெற்று வரும் லா லிகா தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தில் எய்பர் அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

எய்பர்- வால்லெகோனா அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் 40ஆவது நிமிடத்தில் வால்லெகோனா வீரர் ஏஞ்சல் போசோ ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டத்தில் வால்லெகோனா அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 64ஆவது நிமிடத்தில் எய்பர் அணி வீரர் சார்லஸ் ஒரு கோலைப் போட்டார். இரு அணிகளும் 1:1 என்ற கணக்கில் சமநிலையான போது ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. இரு அணி வீரர்களும் போட்டி போட்டுக் கொண்டு ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டம் இறுதியை அண்மித்துக் கொண்டிருக்கையில் 73ஆவது நிமிடத்தில் எய்பர் அணி வீரர் பெட்ரோ லியன் ஒரு கோலைப் போட முடிவில் எய்பர் அணி 2:1 என்ற கணக்கில் அதிரடி வெற்றி பெற்றது.

## 'மன்கட்' ஆட்டமிழப்பு எனக்கு அளித்த அநீதி

### பட்லர் மனந்திறப்பு

ஐ.பி.எல். போட்டியில் பஞ்சாப் - ராஜஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியொன்றில் ராஜஸ்தான் அணி வீரர் பட்லரை பஞ்சாப் பந்து வீச்சாளர் அஸ்வின் 'மன்கட்' முறையில் ஆட்டமிழப்பு செய்திருந்தமை மிகவும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இது குறித்து இதுவரை எதனையும் பேசாது இருந்த பட்லர் முதன் முறையாக மௌனத்தைக் கலைத்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்;

மன்கட் 'ரன்அவுட்' முறை கிரிக்கெட் விதிகளில் இருக்க வேண்டியது அவசியம் தான். ஏனெனில் பந்து வீச்சாளர்கள் பந்து வீசுவதற்கு முன்னதாக துடுப்பாட்ட வீரர்கள் ஆடுகளத்தில் பாதி தூரம் ஓடி விடாமல் இருக்க இது தேவையானதாகும். ஆனால் இந்த விதிமுறையில் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அதாவது பந்து வீச்சாளர்கள் பந்தை கைகளில் இருந்து விடுவிப்பார் என்று எதிர்பார்க்கும் போது துடுப்பாட்ட வீரர்கள் கிரீசை விட்டு வெளியேறினால் ஆட்டமிப்புச் செய்யலாம் என்று கூறப்பட்டு இருப்பதில் தெளிவான வரைமுறை இல்லை. எனவே இந்த விதிமுறையில் உள்ள குழப்பத்துக்கு தீர்வு காண வேண்டியது அவசியமானதாகும்.

எனக்கு மன்கட்' ரன்அவுட்' அளிக்கப்பட்ட ஒளிப் பதிவு காட்சியைப் பார்த்தால் தவறான முடிவு அளிக்கப்பட்டது என்பது தெரியும். பந்து வீச்சாளர் பந்தை கையை விட்டு விடுவிப்பார் என்று எதிர் பார்க்கும் நேரத்தில் நான் கிரீசுக்குள்தான் இருந்தேன். அப்படி இருக்கையில் எனக்கு ஆட்டமிழப்பு வழங்கப்பட்டது உண்மையிலேயே மிகுந்த ஏமாற்றம் அளித்தது. அந்த நேரத்தில் அஸ்வின் நடந்து கொண்ட பாணியை நான் விரும்பவில்லை. இந்தப் போட்டி தொடரின் தொடக்கத்தில் நடந்த இந்தச் சம்பவத்தை நான் ஒரு தவறான முன்னுதாரணமாகக் கருதுகிறேன். விரும்பத்தகாத இந்தச் சம்பவத்தால் சில நாள்க்ள் ஆட்டத்தில் கவனம் செலுத்துவது எனக்குக் கடினமாக இருந்தது. இதுபோன்ற சம்பவம் மீண்டும் எனக்கு நடைபெறாது- என்றார்.



# ரியல் சொசைடட் திரில் வெற்றி



ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் ரியல் சொசைடட் அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் சொசைடட்- ரியல் பெட்டிஸ் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் ரியல் சொசைடட் அணி வீரர் ஜோன்மிய் ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டம் 1:0 என்ற கணக்கில் ரியல் சொசைடட் அணி முன்னிலையில் காணப்பட்டது. இரண்டாம் பாதி ஆட்டத்தின் 56 ஆவது நிமிடத்தில் ரியல் பெட்டிஸ் அணி வீரர் கனலெஸ் ஒரு கோல் அடிக்க இரு அணிகளும் 1:1 என்று சமநிலையானது. போட்டி முடிவடைவதற்குள் இன்னொரு கோலைப் போட்டு வெற்றி பெற்று விட வேண்டும் என்ற நோக்கில் இரு அணி வீரர்களும் ஆக்ரோசமாக ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் 83ஆவது நிமிடத்தில் ரியல் சொசைடட் அணி வீரர் ஒயார்ச பெல் ஒரு கோலைப் போட ரியல் சொசைடட் அணி 2:1 என்ற கணக்கில் ரியல் பெட்டிஸை வீழ்த்தி திரில் வெற்றி பெற்றது.

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் DELF A1
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம் 0779 789 456 021 221 7781
ஆரம்பம் : 06.04.2019 சனி மதியம் 12 மணி.
ஏனைய நிறுவனங்களில் கற்றோரும் இணையலாம்.

NEW SCIENCE WORLD
(Brown Road, Jaffna)
A/L 2021 English Medium
Combined Mathematics
Saturday, Sunday, Monday
6.00 - 7.30 am
Commences on : 07.04.2019 Sunday
By: S.Krishna B.Sc, PGDE

Techno World
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்
▶ பொறியியல் தொழில்நுட்பவியல்
▶ உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
▶ தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
▶ ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.
06.04.2019 சனிக்கிழமை காலை 8.30
077 017 5346
077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

# செவில்லா அணி இலகு வெற்றி

வாடகைக்கு
நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற 2 அறை வீடு, A/C, சமையலறை, parking வசதியுடன் வாடகைக்கு உண்டு.
077 788 7360

காணி விற்பனைக்கு
பொற்பதி 17.5 ph கொக்குவில் 22.5 ph காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. அமைதியான நல்ல அயலவர்களை கொண்டது.
077 227 6173

முக்கிய அறிவித்தல்
T.K.T இன் அன்பான வாடிக்கையாளர்களுக்கு எள்ளின் விலை காரணமாக இன்று 06.04.2019 முதல் நல்லெண்ணெய் விலை உயர்த்தப்பட்டுள்ளது.
750ML - 700.00 Rs
350ML - 340.00 Rs
200ML - 220.00 Rs
தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.
021 225 5718



ஸ்பானியாக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்றில் செவில்லா அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

செவில்லா - அலாவிஸ் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் செவில்லா அணி வீரர் மெனா ஒரு கோலைப் போட்டார். முதல் பாதி ஆட்டத்தில் செவில்லா அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்று காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணி வீரர்களும் ஒருவரையொருவர் முட்டி மோதிக் கொண்டு விறுவிறுப்பாக ஆடினார்கள். ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்தில் செவில்லா அணி வீரர் சரபியா ஒரு கோலைப் போட்டார். ஆட்டத்தின் இறுதியில் அலாவிஸ் அணி வீரர்களால் எந்தவொரு கோல்களையும் பெற முடியாது போக, செவில்லா அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட தரமான பேரீச்சம்பழங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
இப்புத்தாண்டுக்கு உங்களது அன்புக்குரியவர்களுக்கு வழங்கும் இனிப்புகளுடன் ஆரோக்கியமிக்க பேரீச்சம்பழங்களையும் சேர்த்து பகிர்ந்திடுங்கள்
Authorized Distributer for AL FOAH

விலை 195/=இல் இருந்து
Hotline 0777 977 467
DELIGHTING THE WORLD WITH DATES
எம்மிடம் உள்ள வகைகள்
- Safawi Dates
- Algerian Dates
- Sukkari Dates
- Ajwa Premium
- Maryam Dates
- Barari Algerian Dates
- Ajwa No.1
- Sagai Dates
- Date Syrup
- Mabroon Dates
- Medjool Dates
- Kimia Dates
இன்னும் பலவகையான ஈச்சம்பழங்கள்
நாடு பூராகவும் விநியோகஸ்தர்கள் தேவை
ஈச்சம்பழத்தை தினமும் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தி உங்கள் வாழ்க்கையின் ஆரோக்கியத்தை அனுபவியுங்கள்.
ஏப்ரல் 02ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் (SLECC) நடைபெறவுள்ள கண்காட்சியில் அமைந்துள்ள 78, 89 கண்காட்சி கூடத்தில் பேரீச்சம்பழங்களை விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
DATE CROWN
Best Food Marketing (Pvt) Ltd.
No.32/A, Old Moor Street, Colombo - 12. | Tel : 011 2441277 | Fax: 011 2441979
E-mail: bestfoodmarketing@yahoo.com | datecrownsrilanka/
datecrownsl?utm_source=ig_profile_share&igshid=ea8lzodinlio
போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்! தரமான ஈச்சம் பழங்களை பார்த்து வாங்குங்கள்

கொடிபதி ஷனிதா
கோடிபதி சனிதா
KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 428
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.04.05
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 119,839,468/-
I 19 23 34 46
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 576
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.04.05
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 52,001,485/-
வெற்றி இலக்கங்கள்
38 43 53 71 Q
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் ▶ 952
சீட்டிழுப்பு திகதி ▶ 2019.04.04 வியாழக்கிழமை
U 15 32 50 51
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 56,506,312/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 05.04.2019
வெற்றி வாரம் 2493
வர்ணம் நீலம்
துலாம்
வெற்றி இலக்கங்கள் 13 20 27 46
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 24, 19, 292/=
07.04.2019ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ES Printers
Rubber Stamp
450/=
021 492 7471, 021 492 7472
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.